விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 06 புதன்கிழமை (23.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

## சமூக வலுவூட்டல் அமைச்சின் இரண்டு அறைகளுக்கு சீல்

### தேர்தல் ஆணைக்குழு அதிரடி

(கொழும்பு)

சமூக வலுவூட்டல் அமைச்சு கட்டடத்திலுள்ள இரண்டு அறைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு சீல் வைத்துள்ளது. தேர்தல் சட்டங்களை மீறி நியமனக்கடிதங்கள், காசோலைகள் வழங்கிய விவகாரத்தையடுத்தே, இந்த அதிரடி நடவடிக்கையெடுக்கப்பட்டது.

சமுர்த்தி முகாமையாளர்களுக்கு அமைச்சால் நேற்று முன்தினம் நியமனங்கள் மற்றும் காசோலைகளை வழங் கியதாக 23

## தீவிரவாதத்தை இல்லாதொழிக்க எம்மால் மட்டுமே முடியும்

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தீவிரவாதத்தை இல்லா தொழிக்க எம்மால் மட்டுமே முடியும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். 23



## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அறிக்கை

### இன்று பாராளுமன்றில்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் 23

## கனேடிய தேர்தலில் ஹரி ஆனந்தசங்கரி அபார வெற்றி



23

# யாரை ஆதரிப்பது? கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு இன்று கூடுகின்றது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கூடவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் என்ன நிலைப்பாடு, யாரை ஆதரிப்பது என்பதை ஆராய்வதற்கே இந்தக் கலந்துரையாடல் நடக்கவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். (23ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாணத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளி 23

## சாவகச்சேரியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

உடைமையில் கஞ்சா வைத்திருந்ததாக தெரிவிக்கப்படும் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர். 23

## விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவேன்

### ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க



(கொழும்பு)

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் 23

## காரைநகரில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

### இருவருக்கு மரண தண்டனை யாழ்.மேல் நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொலை வழக்கில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட இருவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

வழக்கு தொடர்பான விளக்கங்கள் நிறைவடைந்த நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். காரைநகர் - பாலாவோடை பகுதியில் 2008 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதியன்று, 55 வயதான குடும்பத்தலைவர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் 9 பேர் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆரம்ப விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். வழக்கிற்கான விளக்கங் 23

## கூட்டமைப்பு சஜித்தை ஆதரிப்பதென்றால் பணப்பரிமாற்றம் நடந்திருக்கும் - நாமல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவை ஆதரிக்கும் சாத்தியங்கள் தென்படுவதாக தெரிவித்துள்ளார் நாமல் ராஜபக்ச.

ஐ.தே.கவை ஆதரிப்பதென கூட்டமைப்பு முடிவெடுத்தால், நிதிப்பரிமாற்றங்கள் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார்.

ஐ.தே.க தமிழர்களிற்கு எதையும் செய்யவில்லை. அப்படியிருந்தும், ஐ.தே.கவை ஆதரிப்பதென கூட்டமைப்பு முடிவெடுத்தால் நிதிப்பரிமாற்றம் இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். (ம-3)

## மோ.சைக்கிள் மோதியதில் குடும்பப் பெண் உயிரிழப்பு

### பூநகரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் பூநகரி வில்லடியைச் சேர்ந்த பூதத்தம்பி பஞ்சாச்சரம் (வயது 60) என்ற 5 பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார். 23

## மகா சங்கத்தினரை கட்டுப்படுத்த தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை

### மெதகொட அபேதிஸ்ஸ தேரர்

(கொழும்பு)

மகாசங்கத்தினை கட்டுப்படுத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடையாது என மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். தேர்தல் ஒன்று வருகின்றபோது நாட்டின் அரசியல் நிலவரம் குறித்து மகாசங்கத்தினருக்கு கருத்துத் தெரிவிக்கும் அதிகாரத்தை தேர்தல்கள் ஆணையாளர் இல்லாமல் செய்ய முடியாது என பெலியான பிரிவெனாவின் விகாராதிபதி பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற மகா 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இன்று அகவை 80

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண முன் னாள் முதல மைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணி யின் செயலாளர் நாயகமுமான நீதி யரசர் சி.வி.விக் கேஸ்வரன் அவர் களுக்கு இன்று அகவை எண்பது.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒரு லட்சத்து 32 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்கு களைப் பெற்று வடக்கு மாகாண சபையின் முத லாவது முதலமைச் சர் என்ற பெருமை யைப் பெற்றுக் கொண்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை ஆரம பித்து அதனை மக் களுக்கு அறிவித் திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-3)


## மணமகள் தேவை


76, பரணி 2 சூரியன், செவ்வாய் கனடா
85, பரணி 6 சூரியன் செவ்வாய் கனடா
87, அனுசம் 49 பாவம் சுயதொழில்.
மணமகள் தேவை

துர்க்கா திருமண சேவை

0778185978, 0750111122

(739)


## கண்ணீர் அஞ்சலி



தபால் திணைக்கள வட மாகாணம்
பிராந்திய கணக்காளர்
**கணபதிப்பிள்ளை கஜேந்திரவேள்**
அவர்களின்
பாசமிகு தந்தையார்

**சு.கணபதிப்பிள்ளை**
**(ஓய்வுநிலை அதிபர்)**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பூநகரி தபாலக**
**தபாலதிபர்**
மற்றும்
**உபதபாலதிபர்கள்,**
**ஊழியர்கள்**

(741)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மருதங்கேணி பிரதேச செயலராக கடமையாற்றியபோது எமது நிறுவன சமூகசேவை செயற்பாடுகளுக்கு அனுமதி தந்து பூரண ஒத்துழைப்பு வழங்கி வந்த
**உயர்திரு.கனகசபாபதி கனகேஸ்வரன்** அவர்கள்
யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது சேவை தொடர்வதோடு மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT) (அல்வாய்)**

(C-7997)



## சேவைநலன் பாராட்டும் 60வது பிறந்த நாள் வாழ்த்தும்

**திரு. கந்தசாமி**
**பாலஸ்கந்தராசா**
[மருந்தகத் தொழிலாளி]



எமது அலுவலகத்தில்
கடமையாற்றி அரிய
சேவையினைச் செய்து ஓய்வு
பெறும் திரு.கந்தசாமி
பாலஸ்கந்தராசா அவர்களின்
சேவையைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவருக்கு எமது
இனிய பிறந்தநாள்
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
அவரின் இனிய கனவுகள்
எல்லாம் நிறைவேறி
இன்புற்றிருக்க மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:– **கால்நடை வைத்தியர்கள்**
**மற்றும் சகல அலுவலர்கள்**
**கால்நடை வைத்திய அலுவலகம், பருத்தித்துறை**

(C-7994)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 1934 - 06 - 28 |  | 2019 - 10 - 22 |

### திருமதி கனகமணி துரைச்சாமி

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகமணி துரைச்சாமி நேற்று (22.10.2019) செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பெரியதங்கச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை செல்லம்மா, சின்னத்துரை, முருகேசு, சின்னம்மா முத்துக்குமாரு, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி காலஞ்சென்றவர்களான சிவகுமார், சகுந்தலாதேவி மற்றும் சிவராசா (கண்ணன்) சிவபாலன் (காந்தி), சிவலிங்கம் (ஆனந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற தர்மபாலன் மற்றும் மகேந்திரன், யோகேஸ்வரி (ஜெயா), திருவருட் செல்வி (செல்வி), இராஜேஸ்வரி (ராசி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கல்பனா, மதுமதி, ஜெயபிரதாப், மயூரன், மயூரி, தமிழினி, சாயித்தியன், சாயித்தியா, சாதுரியா, வாகீசன், சுதேசன், கௌசிகன், சிவகுமார், ரவிசங்கர், தாரிணி ஆகியோரின் அன்பான பேர்த்தியும் சாதனா, தனுசாந், நவினேஸ், நிதீன் அஷ்விதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2019) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 0214921894, 0775473217

(C-7998)

## மரண அறிவித்தல்

### இராமசாமி மணிமுத்து



கொழும்பு வத்தளையைப் பிறப்பிடமாகவும் இந்து மகளிர் கல்லூரி கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் தற்போது கைதடி தெற்கில் வசிப்பவருமாகிய இராமசாமி மணிமுத்து 21.10.2019 திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-இசக்கியம்மா தம்பதிகளின் மூத்த மகனும் தேனம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாடசாமி-ஞானதீபம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, மாயாண்டி, இலட்சுமி, தொள்ளமாடன், ஆறுமுகம், பார்வதி மற்றும் மாரியம்மா, பாலையா, பரமசிவம், பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசதுரை (கொழும்பு), தங்கராசா (கொழும்பு), புஸ்பராணி, இராசம்மா, பழனி, திருமலைப்பாண்டியன் (UNHCR), அன்பரசு (Science Hall) மற்றும் திலகவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2019) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி தென்கிழக்கு ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்: குடும்பத்தினர்.
0771369767, 0779184511

(735)

# இனக்கலவரத்தை ஏற்படுத்திய பிரேமதாஸ யுகம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கமுடியாது

## மகிந்த திட்டவட்டம்



(எம்பிலிப்பிட்டிய)

**ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து அனைத்துத் தகவலும் கைவசம் இருந்தும் அரசாங்கம் முஸ்லிம் வாக்குகளைப் பெறும் நோக்கில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் குறித்து பாரம்பரிய சாதாரண இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் வழங்கிய தகவல்களை ஏன் கருத்தில் கொள்ளவில்லை எனவும் தெற்கில் இனக்கலவரத்தை ஏற்படுத்திய பிரேமதாஸ யுகம் மீண்டும் தலைதூக்க இடமளிக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்கில் இனக்கலவரத்தை ஏற்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் யுகம் வேண்டுமா? என்ற கேள்விக்கு பெரும்பாலான மக்கள் வேண்டாம் என்ற பதிலையே வழங்குகின்றார்கள்.

ஆனால் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தந்தையின் நிர்வாகத்தையே முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக குறிப்பிடுகின்றார். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

30 வருட கால யுத்தம் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆனால் அரசியல் பழிவாங்கலுக்காக தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்து அனைத்து புலனாய்வுத் தகவல்களும் கிடைத்தும் அரசாங்கம் முஸ்லிம் வாக்குகளைக் கருத்திற் கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

பயங்கரவாதத் தாக்குதல் குறித்து சாதாரண முஸ்லிம் மக்கள் வழங்கிய செய்திகளை ஏன் செயற்படுத்தவில்லை? முறையற்றவர்களின் தேவைகளால் பாரம்பரிய முஸ்லிம் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதிகள் தொடர்பில் சாதாரண முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் வழங்கிய தகவல்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லிம் அமைச்சர்களினதும் ஆளுநர்களினதும் பணிப்புரைக்காக விடுவிக்கப்பட்டார்கள். இவ்விடயம் தொடர்பில் எமது அரசாங்கத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

தேர்தல் மேடைகளில் கொள்கையற்ற அரசியல் பிரசாரங்களை முன்னெடுப்பவரை நாட்டு மக்கள் ஒருபோதும் ஜனாதிபதியாக்கமாட்டார்கள். தேசிய அரசாங்கத்தில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் மோசடிகள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் ஆளும் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை தேர்தலுக்கு முன்னர் பகிரங்கப்படுத்த வேண்டும்.

பொருளாதாரமும் தேசிய உற்பத்திகளும் கடந்த காலத்தை விட தற்போது தொடர்ந்து வீழ்ச்சி நிலையையே அடைந்துள்ளன. மக்களின் வாழ்க்கைச் செலவுகள் அனைத்தும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. ஆனால் ஆளும் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் தனக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லாத வகையிலே போலியான தேர்தல் வாக்குறுதிகளையே வழங்குகின்றார். போலியான வாக்குறுதிகளுக்கு நாட்டு மக்கள் இம்முறையும் ஏமாற மாட்டார்கள்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் அனைத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் தொடர்ந்து துணை போயுள்ளார்கள். தற்போது மக்கள் விடுதலை முன்னணியினர் அரசாங்கத்திலிருந்து விலகி அரசாங்கத்தைத் தூற்றுவதால் எவ்வித மாற்றமும் இனி ஏற்படாது. முறையற்ற நிர்வாகத்தை முன்னெடுத்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் தகுந்த பாடத்தைக் கற்பிப்பார்கள்.

அரச நிர்வாகத்தை முறையாக முன்னெடுத்துச் செல்ல முடியாத கட்சிக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கும் மக்களாணையை வழங்குவதால் எவ்விதப் பயனும் ஏற்படாது. மக்கள் மனங்களை வென்றவரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தகுந்த பாடத்தை நாட்டு மக்கள் ஜனநாயக முறையில் கற்பிப்பார்கள். பொதுஜன பெரமுன அனைத்துத் தரப்பினரையும் ஒருமுகப்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கு, கிழக்கில் சஜித்திற்கு 90 வீதமானோர் வாக்களிப்பர்

## விஜயகலா நம்பிக்கை



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் வாழும் தமிழ்மக்கள் தமது வாக்குகளை சஜித் பிரேமதாஸவிற்கு ஏற்கனவே வழங்கிவிட்டார்கள் என்றே கூறவேண்டும். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களில் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக 90 சதவீதமான வாக்குகள் பதிவாகும்.

அதேபோன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தேர்தல் பிரசாரத்திற்கான விஜயம் மேற்கொள்ளவிருக்கும் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து அந்த மாகாணங்களில் ஆதிக்கம் செலுத்தும் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் மேடையேறுவார்கள் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெண்கள் மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பிலுள்ள சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளராகக் களமிறக்கியிருக்கும் சஜித் பிரேமதாஸவே நவம்பர் 16 ஆம் திகதியின் பின்னர் இந்நாட்டின் ஜனாதிபதி என்பதை உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

அதே வேளை இந்த நாட்டில் பல்வேறு விதங்களிலும் பெண்கள் புறக்கணிக்கப்பட்டுவந்த நிலையில், அவர்களை வலுவூட்டும் விதமாக இந்த பெண்கள் மாநாடு அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

போரை முடிவிற்குக் கொண்டு வந்ததாகக் கூறுபவர்கள் கடந்த காலத்தில் வடக்கு- கிழக்கில் எமது மக்களைக் கொன்றொழித்ததைத் தவிர வேறெதனையும் செய்யவில்லை. கடந்த அரசாங்கமே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு போதைப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் அதனால் குற்றச்செயல்களும் அதிகரித்தன.

எனினும் கடந்த 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமிருந்த காணிகள் பெருமளவில் விடுவிக்கப்பட்டன. பாலியல் வன்புணர்வுகள், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களே கடந்த காலத்தில் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டின் பின்னர் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வட,கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவாலேயே நேரடியாகப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. குறுகிய காலத்தில் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டன. தற்போது நாட்டில் வெள்ளை வான் கலாசாரம் இல்லை.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் வாழும் தமிழ்மக்கள் தமது வாக்குகளை சஜித் பிரேமதாஸவிற்கு ஏற்கனவே வழங்கிவிட்டார்கள் என்றே கூறவேண்டும். எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக 90 சதவீதமான வாக்குகள் பதிவாகும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இல்லை. எனவே ஏனைய வேட்பாளர்கள் தமது வாக்குகளைப் பூச்சியத்திலிருந்து எண்ண ஆரம்பிக்கும்போது, சஜித் பிரேமதாஸ 20 சதவீதத்திலிருந்தே எண்ணத்தொடங்குவார். சஜித் பிரேமதாஸ நவம்பர் மாதம் வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு தேர்தல் பிரசாரத்திற்காக விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார். அதன்போது அம் மாகாணங்களில் ஆதிக்கம் செலுத்தும் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் சஜித் பிரேமதாஸவுடன் ஒன்றிணைந்து மேடையேறுவார்கள் என்பதை தமிழ் மக்களின் சார்பில் உறுதியுடன் கூறிக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## லசந்த படுகொலை விவகாரம்

# கோத்தபாயவிற்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்தது அமெ.நீதிமன்றம்

(கலிபோர்னியா)

படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோத்தபாயவிற்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்கை அமெரிக்காவின் கலிபோர்னிய நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

லசந்த விக்கிரமதுங்கவின் மரணத்திற்கும் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் நெருங்கிய



தொடர்புள்ளது என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவையே நீதிமன்றம் நிராகரித்தது.

கோத்தபாய சட்டவிரோத படுகொலைகள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், சித்திரவதைகள் ஆகியவற்றில் ஈடுபட்டார் என அகிம்சா விக்கிரமதுங்க குற்றம்சாட்டியிருந்தார்.

இந் நிலையில் கோத்தபாய ராஜபக்ஷ பொதுச்சட்டத்தின் வெளிநாட்டு அதிகாரிகள் விலக்குரிமைக்கு தகுதியானவர் என்ற அடிப்படையில் நீதிமன்றம் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது. (இ-7)

# தென்னாபிரிக்காவுக்கு வெள்ளையடிப்பு




தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி அபார வெற்றி பெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி, மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் விளையாடி வந்தது.

ராஞ்சியில் நடந்த இந்தப் போட்டியில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 497 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது. இதன் பின்னர் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 162 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து இந்திய அணியை விட 335 ஓட்டங்களினால் பின் தங்கியது.

இதையடுத்து பாலோவ்ன் பெற்ற அந்த அணி இரண்டாவது இன்னிங்ஸிலும் ஓட்டங்களைச் சேர்க்கத் தடுமாறியது.

அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ரன்களுக்கு அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுக்க, மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 132 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் நான்காவது நாள் ஆட்டம் நேற்றுக்காலை தொடங்கியது. தொடங்கிய சில நிமிடங்களிலேயே சுழல் பந்துவீச்சாளர் நதீம், புரூயினையும் நிகிடியையும் அடுத்தடுத்து ஆட்டமிழக்கச் செய்தார்.

இதனால் அந்த அணி 133 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 202 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இந்திய அணி கைப்பற்றியது.

ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது ரோகித் சர்மாவுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய பகிரங்க டென்னிஸ் ஆண்டி மர்ரே சம்பியன்



ஐரோப்பிய பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீரர் ஆண்டி மர்ரே சம்பியன் பட்டம் வென்றார்.

பெல்ஜியத்தில் நடைபெற்ற ஐரோப்பிய பகிரங்க தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய அவர், சுவிஸ் வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்காவுடன் மோதினார்.

முதல் செட்டில் அதிரடியாக விளையாடிய வாவ்ரிங்கா 6-3 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார். அடுத்த 2 செட்களிலும் கடுமையாகப் போராடிய மர்ரே 3-6, 6-4, 6-4 என்ற கணக்கில் வென்று கிண்ணத்தை கைப்பற்றி னார்.

இடுப்பு மூட்டு காயத்துக்கு கடந்த ஜனவரியில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட மர்ரே (32 வயது), நீண்ட ஓய்வுக்குப் பிறகு மீண்டும் விளையாட ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் விசுவலிங்கம்

யாழ். நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 5ஆம் வட்டாரம், கச்சேரி-நல்லூர் வீதி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விசுவலிங்கம் அவர்கள் கடந்த (20.10.2019) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி-தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் சர்வலோகசிந்தாமணி அவர்களின் ஆருயிர்க்கணவரும் கேதீஸ்வரன், சத்தியமூர்த்தி, சசிகலா, கிருஷ்ணகலா, சுசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான யோகநாதன், முத்துலெட்சுமி, சரஸ்வதி மற்றும் கோபாலன், சிவசிதம்பரம், சண்முகநாதன், கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தமயந்தி, சிவமனோகரி, உதயகுமாரன், இராஜேஸ்வரன், வசந்தன் (Sam Master) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தனலெட்சுமி, சிதம்பரம், பரமலிங்கம், பரமசிவம், மற்றும் சரசலெட்சுமி, வசந்தாதேவி, ரஜனி, ரெட்ணசிங்கம், மகேஸ்வரன், சதாசிவமூர்த்தி மற்றும் காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அருமை மைத்துனரும் சிவபாக்கியம் அவர்களின் அன்புச் சகலனும் கிஷாந், கிருஷானி, தர்ஷானி, சதுஷன், சார்கவி, சுவாதிகன், பாவலன், அட்சரா, அட்சரன், யதுஷன், அபிஷன், அயனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 24.10.2019 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணயளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு:- 25.10.1938 இறப்பு:- 20.10.2019

இல.237, கச்சேரி- நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| சர்வலோகசிந்தாமணி (மனைவி) | : 0212223512 |
| வசந்தன் (மருமகன் - Sam Master) | : 0778480604 |
| கேதீஸ்வரன் (மகன்) | : +41796496217 |
| சத்தியமூர்த்தி (மகன்) | : +41627512041 |
| உதயகுமாரன் (மருமகன்) | : +41628712870 |
| இராஜேஸ்வரன் (மருமகன்) | : +41434778622 |

(C-8001)

# மைத்திரி தொடர்ந்தும் மாளிகையில் தங்குவதற்கான அமைச்சரவை அனுமதியால் 360 மில்லியனுக்கு மேல் செலவாகலாம்



## ட்ரான்ஸ்பரன்சி ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான மகாகமசேகர மாவத்தையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் தொடர்ந்து தங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்தமை தொடர்பில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஆழ்ந்த கவலைகொள்கிறது.

இது தொடர்பில் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கேள்வி எழுப்பியது. 2007 ஆம் ஆண்டு வெளியான உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு இது எதிரானது எனவும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சுட்டிக்காட்டியது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியிலிருந்த போது 2007 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற வழக்கு (எஸ்.சி.எப். ஆர் 503-2005)தீர்ப்பானது அமைச்சரவை ஜனாதிபதிக்கு மானியங்கள் மற்றும் உரித்துடைமைகள் ஆகியவற்றை வழங்குவதைத் தள்ளுபடி செய்துள்ளது.

20 வருடங்களுக்கு மேலாக ஜனாதிபதியானவர் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்க நேரிடும் போது 360 மில்லியன் ரூபாவிற்கு மேலாக செலவாகுமென ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர தெரிவித்தார்.

எனவே ஜனாதிபதி தொடர்ந்து அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்தை இரத்துச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவின் வெற்றியில் பங்காளிகளானால் பனை தென்னைவளம் சார் தொழில்துறை புத்துயிர்பெறும்



## டக்ளஸ் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் வாழ்வாதாரங்களுடன் பெரும் பங்கு வகிக்கும் பனை தென்னை வளம் சார் தொழிற்றுறையில் கடந்த ஆட்சியில் நாம் புதிய பரிமாற்றங்களுடன் பல செயற்றிட்டங்களை உருவாக்கிக் காட்டியிருந்தோம்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்களால் அது சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படாமையால் அத்துறை சார் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் வீழ்ச்சிகண்டுள்ளது.

இந்த வீழ்ச்சியிலிருந்து அந்த மக்களின் வாழ்வாதாரம் மீண்டும் தூக்கி நிறுத்தப்பட வேண்டுமானால் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்கள் கோத்தபாய ராஜபக்ஷவை வெற்றிபெற செய்வதற்கு பங்காளிகளாவதன் ஊடாக மீண்டும் அத்துறை சார் மக்களின் வாழ்வியலை தூக்கி நிறுத்தி ஓர் ஒளிமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று யாழ்.மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு சங்க சமாசங்களின் பிரதிநிதிகள் டக்ளஸ் தேவானந்தாவுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசில் அமைச்சராக இருந்தபோது அவருடன் கொண்டிருந்த நல்லுறவு காரணமாக பல்வேறு நலத்திட்டங்களை குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது பனை தென்னைவள சார் தொழில்துறையை மேற்கொள்ளும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி பல புதிய நலத்திட்டங்களை உருவாக்கித்தந்திருந்திருக்கின்றோம்.

ஆனாலும் இடை நடுவே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அந்தத் திட்டங்களை தொடர்ந்தும் எம்மால் முன்னெடுக்க முடியாது போனது. இதனால் இத்தொழில் துறைசார் மக்களின் வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆனால் அந்த மக்களின் வாழ்வில் மறுபடியும் நிரந்தரமான பொருளாதார வருவாய்களை உருவாக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை எமது மக்கள் இம்முறை சரியாகப் பயன்படுத்துவார்கள் என்று நான் நம்புகின்றேன். அந்தவகையில் வரவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் எமது கட்சி ஆதரிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் தாமரை மொட்டுச் சின்னத்தில் முன்னிறுத்தியுள்ள வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றியில் நீங்களும் பங்காளிகளாக வேண்டும்.

அதற்காக நீங்கள் எனது வழிமுறை நோக்கி அணிதிரளுங்கள். நாம் செய்வோம் செய்விப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

# அனைத்து வசதிகள் இருந்தும் அலைக்கழிக்கப்படும் மக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி, பிரேத பரிசோதனை அறை மற்றும் உரிய உபகரணங்கள் இருந்தும் பிரேத பரிசோதனைகளுக்காக சடலங்கள் தொடர்ச்சியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதனால் தென்மராட்சிப் பகுதி மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வருவதாகவும், அதிக பணத்தை செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் விசனம் வெளியிட்டார்.

குறிப்பாக வறுமை காரணமாக தற்கொலை செய்பவர்களின் குடும்பங்களை மேலும் வறுமைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாக இது காணப்படுகிறது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை அறையில் உரிய உபகரணங்கள் இல்லாமை தான் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கக் காரணம் எனக் கூறப்பட்டு வந்தது.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி ம.டயாழினியிடம் கேள்வி எழுப்பிய போது, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு திடீர் மரணங்கள் மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு தான் வருகின்றன. தென்மராட்சி மக்கள் கஷ்ட நிலையில் வாழும் மக்கள். நாம் அவர்களை அலைக்கழிக்க இடமளிக்க முடியாது. சடலங்களை யாழிற்கு அனுப்புவதனால் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறையில் உபகரணங்கள் இல்லை என்ற காரணம் முற்றுமுழுதாக பொய்யானது. சகல உபகரணங்களும் பிரேத பரிசோதனை அறையில் உள்ளன. உபகரணங்கள் அனைத்தும் புதியவை. அதனைவிட சட்ட வைத்திய அதிகாரி,பிரேத அறை மற்றும் உதவியாளர்கள் என அனைத்து வசதிகளும் எம்மிடம் உள்ளன. இருந்தும் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நீதிமன்ற உத்தரவைப் பெற்றுச் செல்கின்றமை வருத்தமளிக்கின்றது. இது தொடர்பாக நான் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதியைச் சந்தித்து பேசவுள்ளேன்.சந்திப்பின் போது பிரேத பரிசோதனை அறையில் உள்ள சகல உபகரணங்களின் பட்டியல் மற்றும் புகைப்பட ஆதாரத்தை நீதிபதியிடம் சமர்ப்பிப்பேன். உண்மை நிலவரம் தெரிந்த பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சடலங்களை அனுப்பி வைக்க வேண்டிய தேவை ஏற்படாது. வைத்திய அத்தியட்சகர் குகதாசன் காலத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சடலங்கள் பரிசோதனை செய்யப்பட்டன.

அதனைவிட ஆரம்ப காலத்தில் உரிய உபகரண வசதிகள் இன்றியே சடலங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதனையும் அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேதங்களை பாதுகாப்பாக வைக்கும் குளிரூட்டியில் (கூலர்) தற்போது மூன்று அல்லது நான்கு தினங்கள் மாத்திரமே சடலங்களை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய நிலை காணப்படுகிறது. அதனால் புதிய குளிரூட்டி கொள்வனவிற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# மழைக் காலத்தில் வீட்டுத்திட்டங்கள்; முடிக்காவிட்டால் நிதி திரும்பிவிடுமாம்

## பயனாளிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவிவரும் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் வழங்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டங்களால் பயனாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகக் கவலை வெளியிட்டனர்.

வீட்டுத்திட்டங்களை மேற்பார்வை செய்யும் பிதேச செயலக அதிகாரிகள் நிதி திருப்பிவிடும் எனக் கூறி பயனாளிகளை அவசரப்படுத்தும் நிலையில் மழை காலங்களில் வீடு கட்டுக்குத் தேவையான மணலைப் பெறுவதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும் போது ஆரம்ப நிதி எதுவும் வழங்கப்படாத நிலையில் அத்திபாரம் வெட்டிக் காட்டிய பின்பே நிதி வழங்கப்படுகிறது.

அதிகாரிகளின் நெருக்கடியால் தங்களிடம் இருக்கும் பணத்தை செலவு செய்து வீட்டுத்திட்டத்தைப் பூர்த்தி செய்தால் அரசாங்கத்தால் இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை என அதிகாரிகள் கைவிரிப்பதாகவும் பயனாளிகள் குற்றம்சாட்டினர்.

இருந்த வீட்டை இழந்த நிலையில் வீட்டுத் திட்ட வீட்டை எதிர்பார்த்து வேலைகளை மேற்கொண்ட பலர் இன்னும் தமக்கான முழுமையான நிதி கிடைக்கப் பெறாமல் கடன் சுமையில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே வீட்டுத் திட்டங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரிகள் தமது கடமையை முடித்து விட்டால் போதும் என்றில்லாது வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பிரச்சினை தொடர்பிலும் அக்கறை காட்ட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். (இ-10)

# உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## மகம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

**அதிர்ஷ்ட சோதிடம்**

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடையஇராசி-சிம்மம் ஆகும். சிம்மத்தின் அதிபதி -சூரியன் ஆவார். அதன் சின்னம்-சிங்கம் ஆகும். மகம் நட்சத்திரத்தின் அதிபதி-கேது ஆவார். அதன் சின்னம்-ஆண் எலி ஆகும். எனவே மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களிடம் சூரியன்,கேது கிரகங்களின் குணமும் மேற்கூறிய சின்னங்களின் குணமும் நிறைந்து காணப்படும் என அறிய வேண்டும்.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களிடம் அதிக முன் கோபமும் பிடிவாதமும் நினைத்ததைச் சாதிக்கக் கூடிய மனவல்லமையும் உண்டு. ஈவு, இரக்கமில்லாதவர்கள், பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் மிகுந்து காணப்படும். வஞ்சகம், சூது,கபடம் முதலிய தீயகுணங்களும் இவர்களிடம் அதிகமாக உண்டு. பொறாமை குணமுடையவர்கள். அதிக சுய நலமுடையவர்களாகவும் இருப்பர். அதேசமயம், ஓரளவு நேர்மையாகவும் இருப்பர். இவர்களது இல்வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலகும். அதே சமயம், இவர்களிடம் கொஞ்சம் பயந்த சுபாவமும் உண்டு. சிறிது காலம் இவர்கள் சகோதரர், சகோதரிகள் மத்தியில் நசுங்கி வாழ நேரலாம். வீரம், தீரம், ஆற்றல் உடையவர்கள். எதிரிகளை எளிதில் வெல்லக் கூடிய ஆற்றலும் இவர்களிடம் உண்டு. பெரும்பாலும், இவர்கள் பாங்கு ஏதாவது ஒரு அரசு துறையில் பணியாற்ற நேரலாம். சிலர் அழகு, ஆடம்பரமான கலைஞானமுள்ள தொழில் செய்து ஜீவனம் நடத்த நேரிடும். தனது பிள்ளைகளிடம் அதிக பாசமாக இருப்பார்கள். தந்தை பாசமுடையவர்கள். தாய்ப் பாசமும் உண்டு. தனது உடன் பிறந்த சகோதரர்களில் ஒருவரு க்கு இவர்கள் அதிகமாக உதவி செய்ய நேரலாம். பெரும்பாலும் இவர்கள் கால்வலி, அடிவயிற்றுக் கோளாறு, தலைவலி முதலியவற்றால் சிரமப்பட நேரலாம். இவர்களிடம் நல்ல அரசியல் ஞானமும் அரசியல் தலைவர்களிடம் நட்பும் ஏற்பட இடமுண்டு.

# “இயற்கை அமுது” முதலாமிடம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையே கடந்த 19 ஆம் திகதி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி தரம் 5 மாணவர்களின் “இயற்கை அமுது” என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (இ-9-30)

# யாழ்.பல்கலை பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பேரவைக்கு புதிய உறுப்பினராக குலேந்திரன் சிவராம் அண்மையில் பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சிறப்பு வணிக முதுகலைமாணியும் இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்தின் சிறப்பு உயிரியல் பட்டத்தை பூர்த்தி செய்து இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமிடமிருந்து உயிரியல் துறைக்கான சிறப்பு விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பயிர்ச்செய்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் மாடுகளைப் பிடிக்கவும்

## ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காலபோக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் பயிர்ச் செய்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்குமாறு யாழ்.மாவட்ட கமநல உதவி ஆணையாளர் எஸ்.நிசாந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெற் செய்கைகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகளின் நலன் கருதி அண்மையில் காலபோகப் பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் பயிர்ச் செய்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் மாடுகளைப் பிடிக்கவென அனுமதி வழங்கப்பட்டவர்கள் ஒவ்வொரு பகுதிகளிலும் நியமிக்கப்பட்டனர்.

அவர்கள் மூலம் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்துக் கட்டிய பின் கமநல சேவைகள் நிலையத்துக்கு அறிவிக்க வேண்டும்.

அனுமதி அளிக்கப்பட்டவர்களால் பிடிக்கப்படாது காணி உரிமையாளர்களால் பிடிக்கப்படும் மாடுகள், மாடு பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு ஒப்படைக்கப்படும் மாடுகளை உரியவர்கள் தீர்மானிக்கப்படும் தண்டப் பணத்தைச் செலுத்திக் கொண்டு செல்ல முடியும். உரிமை கோரப்படாத மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என ஆணையாளர்மேலும்தெரிவித்தார்.(இ-10-60)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

“இவள் கிறுக்கி” நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கனகரத்தினம் ம.ம.வி.ஆசிரியர் வீ.ரங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி. விஜிதா செல்வக்குமார், சிறப்பு விருந்தினராக கவிஞர், எழுத்தாளர் அன்பழகி கஜேந்திரா, கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை உதவி வலயக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், யா/ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை ஓய்வுநிலை அதிபர் பொ. நடராசா ஆகியோர் கலந்து கொள்வர். நூல் ஆய்வுரையை கலாபூஷஶ்ரீணம் சி.சிவதாசனும் ஏற்புரையை நூலாசிரியர் ஆதிராவும் வழங்குவர். நூலின் முதற் பிரதியை ஓய்வுநிலை பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.ரி.பத்மநாதன் பெற்றுக்கொள்வார். (இ-5)

# உழவியந்திரம் புதையுண்டது




(கரணவாய்)

வீதி அகலிப்பின்போது வடிகால்கள் கட்டப்பட்ட வீதியின் பகுதிகள் உரியமுறையில் சீர் செய்யப்படாமையால் பருத்தித்துறை நகர சபையின் உழவியந்திரம் ஒன்று அதற்குள் புதையுண்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. புலோலி - கொடிகாமம் வீதி அகலிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதில் மந்திகைப் பகுதியில் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் வீதிக்கும் வடிகாலுக்கும் இடைப்பட்ட பகுதி உரிய முறையில் சீர் செய்யப்படாமையால் வீதியால் பயணித்த வேளை பருத்தித்துறை நகர சபையின் உழவியந்திரம் ஒன்று பிறிதொரு வாகனத்திற்கு இடம்கொடுக்க முற்பட்ட போது, மழை நீர் தேங்கி நின்ற உரியமுறையில் சீர்செய்யப்படாத சகதிக்குள் புதையுண்டது.(இ-5-60)

## இராசி பலன்

23.10.2019

ஐப்பசி 06, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

தசமி முன்னிரவு 9.26 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 12.13 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | கிரகநிலை | | சந் |
| | | | |
| சனி, கேது | குரு | சூரி, சுக் புத | செவ் |

சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம்

**மேடம்:** செய்தொழிலில் அதி பிரயாசை காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்:** தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், சேமிப்புக்கள் கூடும் நாள், பெரிய மனிதர்கள் விடுதேடி வரலாம்.

**தனுசு:** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடங்குவீர்கள், குடும் பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்:** உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

## மருந்தக தொழில்நுட்பவியலாளர்
## PHARMACY TECHNICIAN (NVQ LEVEL-4)

மருந்தக தொழில்சார் அனுவபத்தின் மூலமாக உங்கள் வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ள **Pharmacy Technician** கற்கைநெறி யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் 23.11.2019 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வாரத்தில் இரண்டு நாட்கள் வகுப்புகள் நடக்கும். மாதாந்தக் கட்டணம் ரூபா 2000/=. நான்கு வருடங்கள் மருந்தகத்தில் பணிபுரிந்த அனுபவம் உள்ள, தொடர்ந்தும் மருந்தகங்களில் பணிபுரிபவர்கள் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

கல்விக் கட்டுப்பாடுகளும், வயதுக்கட்டுப்பாடுகளும் இல்லை. 2020 ஆம் ஆண்டு **NAITA**வினால் நடத்தப்படும் பரீட்சைக்கு தோற்றக்கூடியதாக இருக்கும். 09.11.2019 ஆம் திகதி சனிக்கிழமை இந்த கற்கைநெறி சம்பந்தமான கருத்தரங்கும், நேர்முகப் பரீட்சையும் **NAITA** நிறுவனத்தினால் நடத்தப்படும். உங்கள் விண்ணப்பங்களை நேரடியாக 25.10.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நேரு **Sir** இடம் ஒப்படைக்கலாம்.

(250) **தொடர்பு:-077 316 4251**


# ஹேமசிறி பெர்னாண்டோவிடம் 3 மணித்தியாலங்கள் விசாரணை

## பிரதமர் இன்று முன்னிலை



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஊழல், மோசடிகள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி மூன்று மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் சாட்சியமளித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலையாகிய ஹேமசிறி பெர்னாண்டோவிடம் இவ்வாறு சாட்சியம் பெறப்பட்டதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஹேமசிறி பெர்னாண்டோ மக்கள் வங்கியின் தலைவராக செயற்பட்ட காலத்தில், 2016, 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வங்கிக்கு கணனிகளை கொள்வனவு செய்ததில் நிதிமோசடியில் ஈடுபட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாகவே அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## IELTS

எமது கல்வி நிலையம் IELTS போதிப்பதற்கு சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

**AN INNOVATIVE APPROACH TO IELTS**

**OUR TARGET IS BAND : 09**

**IELTS LIFE SKILLS A1 B1**

**IELTS Registration Centre for British Council**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.

**Pearson English Course Level B2**

எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

**BRITISH COLLEGE OF ENGLISH**

Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)

Tel: 021 222 0384, 077 880 3887




தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம் சார்பாக அதன் நிறுவுநர் எஸ்.வி.சிறிதரன் மைதிலி தம்பதியினர் தலைமையில் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் 65 மாணவர்களுக்கும் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் 85 மாணவர்களுக்கும் சீருடைகள், பாதணிகள், கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நல்லூர் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா கலந்து கொண்டார்.


# சேவைநலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்தும்

## திருமதி. மங்களேஸ்வரி சேதுலிங்கம்

(பிரதி அதிபர் S.L.T.S-I

B.A (Hons) (Economics-Special), PGDE




**சேவை விபரம்**

நு/தலோஸ் தமிழ் மகா வித்தியாலயம்
ஆசிரியர்-1985.07.02-1989.12.31

யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்
ஆசிரியர்-1990.01.01-1993.02.28

யா/ஹாட்லிக் கல்லூரி
ஆசிரியர்-1993.03.01-2000.01.16

யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்
ஆசிரியர்-2000.01.17-2000.09.03

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
ஆசிரியர்-2000.09.04-2011.04.05

யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
ஆசிரியர்-2011.04.06-2011.09.04

யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
அதிபர்-2011.09.05-2012.11.15

யா/வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை
அதிபர்-2012.11.16-2016.01.10

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
பிரதி அதிபர்- 2016.01.11-2019.10.22

**எமது பாடசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றி 22.10.2019 ஓய்வு பெற்று இன்று தனது பிறந்த நாளை கொண்டாடும் எமது பாடசாலையின் பிரதி அதிபரை அகமகிழ வாழ்த்துகின்றோம்.** (697)

யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.

ஆசிரியர், ஊழியர்
நலன்புரிச்சங்கம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 38<br>உயரம்:6'<br>தகைமை/தொழில் BSc,MSc பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/10190 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 1<br>கி.பா: செவ்.12 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: GAQபடித்தவர்<br>ஆயுள்வேதசிகிச்சையாளர் (தனியார்)<br>வன்முறையின் போது 1 கால் இழந்தவர்<br>தொ.இ: G/6483 |
| பிறப்பு: 1981இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineer (லண்டன்)<br>மூன்று மாதத்தில் விவாகரத்து பெற்றவர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி கணக்காளர்<br>தொ.இ: B/10191 | பிறப்பு: 1991இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: செவ்.12 இல்<br>உயரம்: 4'5"<br>தகைமை/தொழில்:Bsc (IT)<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: G/6486 |
| பிறப்பு: 1983இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி<br>உயரம்:5'8" கி.பா: 44<br>தகைமை/தொழில்BSc,BCSதனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டுப் பெண் வெளிநாடு செல்ல வேண்டும்<br>தொ.இ: B/10192 | பிறப்பு: 1988இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:10<br>உயரம்:4'9"<br>தகைமை/தொழில்:பட்டதாரிவங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/6513 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா:11(முதற்சுற்று) செவ்.4 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L கடை<br>எதிர்பார்ப்பு:தொழிலுள்ளவர்<br>தொ.இ: B/10193 | பிறப்பு: 1980இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 32.5 செவ்.8 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்B.A,M.A பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/6518 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2019-16.11.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் குரு விரய ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் இராசியிலேயே சனியும் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே மனக்கவலை அதிகரிக்கும். மக்கள் செல்வங்களாலும் மற்ற உறவினர்களாலும் அமைதி குறையலாம். விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் தானாக வந்து சேரலாம். எப்பொழுதும் ஏழரைச் சனியில் ஜென்மச்சனி நடைபெறுகின்ற பொழுது கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. உங்கள் இராசியில் கேது இருப்பதால், அருகில் இருப்பவர்களாலும் தொல்லை, அரசு வழியிலும் தொல்லை, அதிகாரிகளாலும் தொல்லை என்ற நிலை உருவாகும்.

மாதத் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. 9, 10, 11 ஆகிய மூன்று கிரகங்களுக்கு அதிபதியும் ஒன்றுகூடி லாப ஸ்தானத்திலேயே இருப்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பணப்பிரச்சினை இல்லையென்றாலும் மனக்கவலைகள் அதிகரிக்கும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உன்னதமான நிலை அமைய குருப்பெயர்ச்சி வரை காத்திருக்க வேண்டும். அல்லது சனிப்பெயர்ச்சி வரை காத்திருக்க வேண்டும்.

ஜென்மத்தில் குரு வரும்பொழுது நன்மை செய்யுமா? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். மற்ற இராசிக்காரர்களுக்கு எல்லாம் ஜென்ம குரு வரும்பொழுது "ஜென்மராமர் வனத்திலே" என்று புராணப் பாடல் இருக்கிறது. அதன் விளைவாக மனக்கவலை நமக்கு ஏற்படும். ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஜென்ம குரு வரும் பொழுது மனக்கலக்கம் ஏற்படாது. மனமகிழ்ச்சி அதிகம் உருவாகும். காரணம் உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்க வரும் பொழுது சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் கிரகம் எந்தப் பாதிப்பும் ஏற்படுத்தாது.

'குரு பார்த்தாலும் கோடி தோஷ நிவர்த்தி', 'குரு சேர்ந்தாலும் கோடிதோஷ நிவர்த்தி' என்பது ஜோதிட நியதி. அந்த அடிப்படையில் குரு உங்கள் இராசியில் சேரும் பொழுது சாதகமான பலன்களையே தருவார். இதுவரை ஏற்பட்ட சோதனைகள் அகலும். ரொக்கத்தால் வந்த சிக்கல்கள் விலகும். குருவின் பார்வை பலத்தால் பலவிதமான நன்மைகளை நீங்கள் காணப்போகிறீர்கள்.

இம்மாதம் கந்தசஷ்டி விழா நடைபெற இருக்கிறது. முருகப்பெருமானை சூரசம்ஹாரம் அன்று வழிபட்டால் சீரான வாழ்க்கை கிடைக்கும்.

தனுசு இராசியில் குருவின் சஞ்சாரம்

## வழிபாட்டால் வந்த துயர் விலகும்

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், ஒக்டோபர் 28 ஆம் திகதி ஜென்ம இராசிக்கு வருகின்றார். எனவே ஆரோக்கிய தொல்லை அகலும். பொருளாதாரப் பற்றாக்குறை மாறும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களில் பதிவதால் பிள்ளைகள் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும்.

இல்லறத்தை நல்லறமாக அமைத்துக் கொள்வீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வரும். ஜென்மச் சனியோடு குரு சேர்வதால் சனியின் கடுமை குறையும். ஆரோக்கியம் சீராகும்.

விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

ஒக்டோபர் 29 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 6 இற்கு அதிபதி 12 இல் வரும் பொழுது 'விபரீத இராஜ




யோகம்' செயற்படும். எனவே இக்காலத்தில் நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாத இராஜ யோகத்தை அடையப்போகிறீர்கள். விலகிய சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். உத்தியோக ரீதியாக பதவி உயர்வுபெற்று வெளிநாடு செல்லும் யோகம் கூட ஒருசிலருக்கு வாய்க்கும்.

செவ்வாய் பெயர்ச்சியும் புதனின் வக்கிர நிவர்த்தியும்

நவம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். 7, 10 இற்கு அதிபதி வக்கிர நிவர்த்தி ஆகும் பொழுது குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீடால்ஏற்பட்ட பிரச்சினை அகலும். தொழில் பணியாளர்களால் தொல்லை ஏற்பட்டதை முன்னிட்டு அவர்களை விலக்கிவிட்டுப் புதியவர்களை இணைத்துக்கொள்ள முன்வருவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும். நவம்பர் 12 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். இதன் விளைவாக இட விற்பனையின் மூலமும் தனலாபம் கிடைக்கும். முன்பு வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலைக்குப் போகும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். குடும்பத்தினர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானையும் சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

வீண் விரயங்களில் இருந்து தப்பிக்கும் யோகம் உண்டு. குருப்பெயர்ச்சி இம்மாதம் நிகழவிருப்பதால் அதுவரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. ஒக்டோபர் 28 ஆம் திகதிக்கு மேல் நினைத்ததை முடிக்கும் சூழ்நிலை உருவாகும். நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும்.

பணப்பிரச்சினை அகலும். பக்தி மார்க்கத்தில் மனதை செலுத்துவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளையும் முன்னோர் வழிபாட்டையும் முறையாகச் செய்வதன் மூலம் கலக்கங்கள் அகலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தேவையற்ற பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டு. வெளிநாட்டு முயற்சி கைகூடலாம்.

உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய தகவல் வரும். மேல் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். தாய்வழி ஆதரவு தக்கவிதத்தில் கிடைக்கும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். கந்தசஷ்டி திருநாளில் விரதமிருந்து சண்முகநாதரை வழிபட்டால் சகல யோகங்களும் வந்து சேரும்.

---

விகாரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி பகவான் மாதத் தொடக்கத்தில் ஏழரைச் சனியில் விரயச் சனியாகச் சஞ்சரிக்கிறார். அவரோடு கேதுவும் 12 ஆம் இடத்தில் வீற்றிருந்து கூடுதல் விரயங்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறார். அதே நேரத்தில் இம்மாதம் குருப்பெயர்ச்சியும் நிகழவிருக்கின்றது. குருவும் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு வருகிறார். குருப்பெயர்ச்சியின் விளைவாக சனி, கேது ஆகிய இரண்டு கிரகங்களின் கடுமையும் கொஞ்சம் குறையும்.

குறிப்பாக 12 ஆம் இடத்தை 'அயன சயன ஸ்தானம்' என்று சொல்வது வழக்கம். எனவே அந்த இடத்தில் குரு பகவான் தன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் சுகங்களும் சந்தோசங்களும் அதிகமாகவே தரவேண்டும். மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி குரு, 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் இருப்பதால் விரயத்திற்கேற்ற வருமானம் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும். அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஏழரைச்சனியில் முதல் சுற்றோ அல்லது மூன்றாவது சுற்றோ நடைபெற்றால் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். பொங்கு சனிக்காலம் எனப்படும் 2 ஆவது சுற்று நடைபெறுபவர்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த வாய்ப்புகள் கைகூடி வரும். என்ன இருந்தாலும் விரயச்சனி என்பதால் பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. வாகனப் பழுதுகளால் கவலைப்பட நேரிடும். மருத்துவச் செலவுகள் கூடி மனக்கலக்கத்தை உருவாக்கும். ஏதேனும் சிறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. இடம் வாங்குவது, வீடு கட்டுவது போன்ற சுபகாரியங்களைச் செய்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

இம்மாதம் கந்தசஷ்டி விழா நடைபெற இருக்கிறது. அதில் சூரசம்ஹாரம் அன்று சுப்ரமணியக் கடவுளை உள்ளன்போடு வழிபட்டு வந்தால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். குகன் வழிபாடு உங்கள் குறைகளைத் தீர்த்து வைக்கும்.

தனுசு இராசியில் குருவின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், ஒக்டோபர் 28 ஆம் திகதி விரய ஸ்தானத்திற்கு வரப்போகிறார். எனவே விரயங்கள் அதிகரிக்குமோ என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். சகாய ஸ்தானம் எனப்படும் மூன்றாம் இடத்திற்கு குரு அதிபதி என்பதால் வரும் விரயங்களை சுப விரயமாகவே மாற்றிக் காட்டுவார். சகோதர வர்க்கத்தினரின் சலசலப்புகள் குறையும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வழக்




குகள் சாதகமாக முடியும். குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய மூன்று இடங்களில் பதிவதால் தாய்வழி ஆதரவு கிடைக்கும். பூமி வாங்கும்

## சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்

யோகம் கைகூடும். உத்தியோக முயற்சியில் எதிர்பார்த்த இடமாற்றமும் உத்தியோக உயர்வும் வரலாம். இதுபோன்ற காலங்களில் குருவைக் கொண்டாடி வழிபடுவது நல்லது.

விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

ஒக்டோபர் 29 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகளை முன்னிட்டு செலவிடுவீர்கள். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு வெளியில் வந்து சுயதொழில் தொடங்கும் வாய்ப்பும் உருவாகும். தங்கம், வெள்ளி மற்றும் விலை உயர்ந்தபொருட்களை வாங்குவதில் அக்கறை செலுத்துவீர்கள். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். திருமண வயதை அடைந்தவர்களுக்கு நல்ல வரன்கள் தேடி வரும்.

செவ்வாய் பெயர்ச்சியும் புதனின் வக்கிர நிவர்த்தியும்

நவம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம். எதிரிகள் உங்களைவிட்டு விலகுவர். தந்தை வழி உறவில் மூன்றாம் நபரால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். வெளிநாட்டில் பணி புரிய ஆர்வம் கொண்டவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும். நவம்பர் 12 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். இக்காலம் ஓர் இனிய காலமாக அமையும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்பு விழா போன்றவை காண்பீர்கள். குடும்பப் பெரியவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபார விரோதங்கள் விலகும் உடன்பிறப்புகள்உங்கள்ஒவ்வொரு செயலுக்கும் உறுதுணை புரிவதாகச் சொல்வர்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச்சுமை கூடுதலாகவே இருக்கும். தீவிரமாக முயற்சித்தும் காரியம் நடைபெறவில்லையே என்று கவலைப் படுவீர்கள். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வருவதில் தாமதம் ஏற்படும். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் கூடுதலாக இருந்தாலும், அது சுபவிரயமாக உருவாகும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. நெடுங்காலமாக ஏற்பட்ட நோய் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்ள முயற்சி செய்வீர்கள்.



உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கைகூடிவரும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். பொதுவாக இம்மாதம் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் தான் விரயங்களில் இருந்து தப்பிக்க நேரிடும். சனீஸ்வர வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

(தொடரும்)

# சுதந்திரக் கட்சி பலமிழந்தமைக்கு

# சந்திரிகா பொறுப்புக்கூற வேண்டும்

## எம்மீது வீண்பழி சுமத்துவதை ஏற்க முடியாது-தயாசிறி

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி வரலாற்றுச் சாதனை மிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்த எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மகளான சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.கவைக் காப்பாற்ற செயற்படுகின்றமை கவலையளிப்பதாகத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, தற்போது சுதந்திரக் கட்சி பலமிழந்து மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமைக்கும் ஆலோசகர் என்ற ரீதியில் சந்திரிகா குமாரதுங்க பொறுப்புக்கூற வேண்டும் என்றும் தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1981 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்சியிலிருந்து பிரிந்து சென்று செயற்பட்டிருந்தாலும் மீண்டும் சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்புவதற்கு பாடுபட்டார்.

அந்த வகையில் அவர் மீது எமக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அவரது தந்தைக்கு ஏற்பட்ட கொள்கை ரீதியான முரண்பாடுகளால் அவர் கட்சியை விட்டு விலகிச் செயற்பட்டமைக்கு எதிர்மாறாக தற்போது சந்திரிகா குமாரதுங்க செயற்படுகின்றார்.



கடந்த 2005 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதன் பின்னர் இருவருக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டன.

அவற்றின் காரணமாகவே கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராகக் களமிறக்குவதில் சந்திரிகா குமாரதுங்க முன்னின்று செயற்பட்டார். மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அன்று அவர் எடுத்த தீர்மானம் பிழையானது என்பதை தற்போது அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அந்த முடிவுதான் இன்று சுதந்திரக் கட்சியை சிதைத்து பலம் அற்றதாக்கி மூன்றாம் நிலைக்கு தள்ளியுள்ளது. கட்சியின் ஆலோசகர் என்ற வகையில் அவர் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும். அத்தோடு சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரின் மகளாக இருந்து கொண்டு கட்சியை அழிக்கும் வகையில் சந்திரிகா செயற்படுவது உண்மையில் கவலையளிக்கிறது.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவது உறுதியாகும். அவர் வெற்றி பெற்றதன் பின்னர் சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவியவர்கள் மீண்டும் எம்முடன் இணைவார்கள். தற்போது ஐ.தே.கவுடன் இணைபவர்கள் பணத்திற்கு விலை போயுள்ளனர். எதிர்காலத்தில் இந்த நிலைமை மாற்றமடையும்.

எல்பிட்டி தேர்தல் விடயங்களில் சந்திரிகா குமாரதுங்கவை இணைத்துக் கொள்ளவில்லை என்றும் அவர் எம்மீது குற்றம் சாட்டியிருக்கிறார். எனினும் அது தொடர்பாக கூட்டப்பட்ட மத்திய குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தும் அவர் கலந்து கொள்ளவில்லை. எனவே எம்மீது வீண் பழி சுமத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என தயாசிறி மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெற்றி பெற்ற பின்னர் எனது முதல் நியமனம்

## பொன்சேகா-சஜித் உறுதி



(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்ற பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் வெற்றிபெற்ற பின்னர் தன்னுடைய முதல் நியமனம் சரத் பொன்சேகா எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


தன்னுடைய அரசாங்கம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டை பாதுகாத்த உண்மையான இராணுவ வீரர்கள் தன்னுடன் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1866

### அபிஷன்

இன்னுமா சமையல் ஆகவில்லை. நான் ஹோட்டலுக்குப் போறேன்.
மனைவி: ஒரு ஐந்து நிமிடம் பொறுங்கோ... அதுக்குள்ளஆகிடுமா? இல்லை... நானும் புடவையை மாத்திட்டு உங்களோட வந்திடுறன்



### ஜெனி

ஒழுங்கா போய் தூங்குறீங்களா? இல்லை பொலிஸ்கிட்ட பிடிச்சு கொடுக்கவா?



### பிரியா

காதல் என்பது பனைமரம் மாதிரி... ஏறினால் நுங்கு! கீழே விழுந்தால் சங்கு



### கஜானி

வெறுத்துப்போய் சாகப்போறேன்னு ஸ்டேட்டஸ் போட்டா ஒரு பக்கி ஹப்பி ஜேர்னின்னு கமென்ட் பண்ணியிருக்குது.



### விதுஷன்

கண்ணு கோளாறுன்னு சொன்னியே கண் டாக்டர போய் பாத்தியா? அவருக்கு நானே பரவாயில்லை ஏன்டா? கண்ணு தெரியலைன்னு போனா அவரு டோர்ச் அடிச்சு என் கண்ணைப் பார்க்கிறாரு



### ரூபன்

இது மனிதர் காதல் அல்ல...அதையும் தாண்டி...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# த.தே.கூட்டமைப்பு தன்னிச்சையாக செயற்பட்டால் பொது இணக்கப்பாடு செயலிழக்கும்

## ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

ஐந்து தமிழ்க்கட்சிகளும் ஒன்றிணைந்து தயாரித்த கோரிக்கைகள் தொடர்பாக வேட்பாளர்களுடன் பரிசீலிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு தரப்பிற்கு ஆதரவு வழங்கும் செயற்பாட்டை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட்டால் இந்த பொது இணக்கப்பாடு என்பது செயலிழக்கும் நிலைமையே ஏற்படும். எனவே கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஏதோ ஒரு வகையில் தீர்வை பெற்றுக்கொள்ளும் முயற்சியாக தான் ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்தன. யாருடைய சொல் பேச்சையும் கேட்டு அந்த முடிவிற்கு போகவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எம்மில் குற்றம் சாட்டுவது போல் குறிப்பாக இந்தியாவின் பேச்சினை கேட்டு எந்த முடிவினையும் எடுக்கவில்லை. அப்படி அவர்கள் சொல்லும் பாசையில் சொல்ல வேண்டுமானால் இவர்கள் சீனாவிடம் கேட்டுவிட்டு தான் பேசுகிறார்களா? என்ற கேள்வி எங்களாலும் கேட்கமுடியும்.

இந்த பொது இணக்கப்பாட்டு வேலைத்திட்டமானது தமிழ்மக்கள் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட பட்டறிவினை அடிப்படையாக வைத்தே ஆறு கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களுடன் இணைந்து இந்தக் கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்தனர். நடைபெற்ற 5 கூட்டங்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் கலந்துகொண்டார்கள். அந்தக் கோரிக்கைகள் கைச்சாத்திடுவதற்கான இறுதிச் சந்தர்ப்பத்திலே தான் இடைக்கால அறிக்கையை நிராகரிக்கவேண்டும் என்று அவர்கள் தெரிவித்து, விலகினார்கள். இடைக்கால அறிக்கை என்பது செயலிழந்து போன விடயம்.

அதனை விட தயாரிக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளில் அவர்களது கட்சி முன்வைத்த பல்வேறு விடயங்களும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

தற்போது தமிழ்க் கட்சிகளால் தயாரிக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளை தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கோத்தபாய நேரடியாக தெரிவித்துள்ளதுடன் எந்த ஒரு உடன்படிக்கைகளிற்கும் இணங்கி வரமாட்டோம் என்று சஜித் பிரேமதாஸவும் கூறியிருக்கிறார்.

வடகிழக்கு இணைப்பை ஏற்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியும் கூறியிருக்கிறார்கள்.

எனவே இந்த 5 கட்சிகளும் இணைந்து எடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக நாம் இறுக்கமான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். ஏனெனில் கடந்த தேர்தல்களில் நிபந்தனைகளற்ற ஆதரவினை கூட்டமைப்பு வழங்கியிருந்தமையால் தமிழ் மக்கள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். இதனால் எமது கோரிக்கைகளினை நிராகரிப்பவர்களிற்கு ஆதரவு வழங்க முடியாத நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.



அத்துடன் எங்களை சந்திக்க விரும்புவர்களை சந்தித்து இந்த கோரிக்கைகள் தொடர்பாக பேசலாம். பேச விரும்பாதவர்களோடு பேசவேண்டிய அவசியம் இல்லை. கோத்தபாய நேரடியாகவே நிராகரித்திருக்கிறார். எனவே மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளிற்கிடையிலுமே எமது சந்திப்பு இருக்கிறது. அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்களது பிரச்சினைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள் என்பதை பார்த்து, இந்த 5 கட்சிகளும் மீண்டும் க்லந்துரையாடி எடுக்கவேண்டிய நிலைப்பாடு தொடர்பாக அறிவிப்போம்.

இதேவேளை சிவாஜிலிங்கம் வேட்பாளராக நிற்பது தொடர்பாக அவரது கட்சியான ரெலோவிற்குள்ளும் பேசப்படவில்லை. ஏனைய கட்சிகளுடனும் பேசப்படவில்லை. எனவே அவருக்கு ஆதரவு தெரிவிப்பதா? என்று 5 கட்சிகளும் இணைந்தே தீர்மானிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-299)




# ஜனாதிபதித் தேர்தல் முறைகேடு; வவுனியாவில் 6 முறைப்பாடுகள்

(குருமன்காடு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வடமாகாண பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.ஜி. லலித் ஆனந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் நான்காயிரத்து 140 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைகேடுகளாக 6 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றன. அவை தேர்தலில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாத சிறிய முறைப்பாடுகள். இருப்பினும் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சுமுகமாக தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-250)

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயலமர்வு



(மன்னார்)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கம் சகவாழ்வு மற்றும் வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான தெளிவூட்டல் மற்றும் கருத்துப்பகிர்வு நிகழ்வானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் மன் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையில் ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜோசப் நயன் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் இன,மத ரீதியான முரண்பாடுகளை கடந்து நல்லிணக்கத்தை சமுதாய ரீதியில் கட்டியெழுப்பும் நோக்கில் ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் சுமார் 20 இற்கு மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்காக குறித்த விழுப்புணர்வு செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

அதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் நல்லிணக்கம் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் நிலைமாறு கால நீதி மற்றும் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் இன,மத முறுகல் தொடர்பாகவும் அவற்றின் ஊடாக கற்றுகொண்ட பாடங்கள் தொடர்பான காணொலிகளும் காட்சிப்படுத்தப்பட்டன. (9-285)

# ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேர் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த வருடம் 2018.08.02 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். அப்போது நீரியல் வளத்துறை திணைக்கள அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

இவ்வாறு அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் 7 பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9)

# முல்லை.முள்ளியவளை வித்தியானாந்தா கல்லூரிக்கு அதிபரை நியமிக்குமாறு கோரிப் போராட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு அதிபரை நியமிக்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

விந்தியானந்த கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவர் ஓய்வுபெற்றுச் சென்று ஒருவருடம் கடந்த நிலையிலும் இதுவரை பாடசாலைக்கு அதிபர் நியமனம் செய்யப்படவில்லை.

இந் நிலையிலேயே பாடசாலையின் பழைய மாணவர்கள், பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் பாடசாலையினுடைய நலன் விரும்பிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இக் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இந்த போராட்டத்தில் கல்வியமைச்சினைக் கோருகின்ற வகையில், உடனடியாக அதிபர் ஒருவரை பாடசாலைக்கு நியமிக்க வேண்டும், ஒரு வருடகாலமாக அதிபர் இல்லாது ஒரு தேசிய பாடசாலை இயங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது, எங்களது கல்லூரியே எமது உயிர் நாடி, உடனடியாக அதிபர் ஒருவரை நியமியுங்கள் போன்ற கோசங்களும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மேலும் இந்தப் போராட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், க.விஜிந்தன், த.அமலன், இ.ஜெகதீசன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (9)

# தொடர் மழையால் மன்னார் பகுதியில் தேங்கும் நீரை வெளியேற்றக் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தேங்குகின்ற மழை நீரை வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என சபை உறுப்பினர்களினால் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 20 ஆவது அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நகரசபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த அமர்வின் போதே நகரசபை உறுப்பினர்கள் குறித்த கோரிக்கையினை முன் வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் நகர சபைக்குட்பட்ட பல பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது.



எனவே குறித்த மழை நீரை வெளியேற்றும் வகையில், வடிகாலமைப்புக்கள் சீர் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் நகர சபை உறுப்பினர்கள் என்ற வகை யில் எங்களிடம் தமது பிரச்சினை களை முன் வைக்கின்றனர்.

எனவே நாங்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தனர். (9-285)

# வீட்டுத்திட்டத்தை நம்பி தற்காலிக வீடுகளை கைவிட்டு தற்போது வெள்ளத்தில் மிதக்கும் ஜிம்ரோநகர் மக்கள்

## அவலத்தைப் போக்க அதிகாரிகள் முன்வர வேண்டுமெனக் கோரிக்கை

(மன்னார்)

முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் அமைச்சின் கீழ் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட யாவருக்கும் நிழல் வீட்டுத் திட்டத்தை நம்பி இருந்த வீடுகளையும் கைவிட்டுவிட்டு கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக வெள்ளத்தில் மிதக்கும் ஜிம்ரோநகர் மக்கள் தொடர்ச்சியாக தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் அரச அதிகாரிகள் பாராமுகாமாகச் செயற்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜிம்ரோநகர் மக்கள் வருடாவருடம் வெள்ளத்தினால் பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இம்முறை குறித்த பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டதை தொடர்ந்து தாம் இருந்த வீடுகளை அகற்றி நுண் நிதி புதிதாக வீடுகளை அமைப்பதற்கான அத்திபாரங்களை கட்டிய நிலையில் சிலருக்கு முதல் கட்ட நிதியும் பலருக்கு இரண்டாம் கட்டம் வரை மட்டுமே நிதி வழங்கப்பட்டதன் காரணமாக வீட்டுத் திட்டங்கள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளன.

மக்கள் தற்காலிகமாக இருந்த வீடும் இன்றி புதிய வீடும் இன்றி கடன் சுமையில் தத்தளிப்பதுடன் வெள்ள நீரில் மிதந்தவாறு வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

குறித்த வெள்ளநீரை வெளியேற்றுவதற்காக கூட இதுவரைக்கும் அரசாங்கத்தினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்படும் சுமார் 300 குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் வீதிகள் அமைக்கப்படும் போது வடிகால்கள் வசதிகள் இல்லாமல் வீதிகளை அமைத்ததால் தங்களுடைய வீடுகள் வயல்கள் போல் உருவாகியுள்ளதாகவும் மழை வெள்ளத்தினால் வரும் நீர் வழிந்தோட இடம் இல்லாத காரணத்தினால் தமது காணிகள் வீடகளுக்குள்ளேயே நீர் நிற்பதனால் பெரும் அசௌகரியத்துடன் வாழ்ந்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீடுகள் மாத்திரம் இன்றி மைதானம், பாடசாலைகள், பாதைகள், முன்பள்ளிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் தங்களுடைய பாதணிகளை கைகளில் கொண்டு சென்று பாடசாலைவளாகத்தினுல்வைத்தே அணிய வேண்டிய நிலை இருப்பதோடு பாடசாலை வளாகத்தினுள் தண்ணீர் தேங்கி நிற்பதன் காரணமாக மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக தங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு உரிய மீதி நிதியை வழங்கி தாம் நிம்மதியாக வாழ வழியை மேற்கொள்ளுமாறும் தமது காணிகளுக்குள் இருக்கின்ற வெள்ள நீரினை மிக விரைவாக வடிகால்களை வெட்டி நீரை வெளியேற்றுமாறும் குறித்த மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராமம் நீரில் மூழ்கி பல அனர்த்தங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையிலும் இதுவரை எந்த ஒரு அதிகாரிகளும் தங்களை வந்து பார்த்து தமக்கான அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்து தருவதற்கு முன்வரவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (9-281)

# வவுனியாவில் வீதியால் சென்றவர்கள் மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் மது போதையில் நின்றிருந்த இளைஞர்கள் தாக்கியமையால் இரண்டு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மது போதையில் நின்றிருந்த சிலர் அவ்வீதியால் பயணித்த இருவரை வழிமறித்து அவர்களுடன் முரண்பட்டதுடன் போத்தல் ஒன்றால் அவர்களை தாக்கி குத்தியுள்ளனர்.

இதனால் காயமடைந்த நிலையில் 30 மற்றும் 24 வயதான இரு இளைஞர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

பூந்தோட்டம் சந்தியில் ஒன்றுகூடும் "குறிப்பிட்ட ஒரு சில இளைஞர்கள்" அவ்வீதி வழியாக பயணிக்கும் பொதுமகன்களிடம் வம்புச்சேட்டை செய்துவரும் செயற்பாடுகள் அண்மைய நாட்களாக அதிகரித்துக் காணப்படுவதுடன், ஒவ்வொரு நாளும் அடிதடிச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக கிராம வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (9-299)

# மன்னாரில் இளைஞர் முகாம்



(மன்னார்)

இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு தசாப்த நிறைவினை கொண்டாடும் வகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர்களின் இயலளவு மற்றும் ஆளுமை விருத்தியை முன்னேற்றுவிக்கும் நோக்குடன் தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் இளைஞர் முகாம் நானாட்டான் பிரதேச இளைஞர் கழகங்களை உள்ளடக்கி "எதிர்பார்ப்பின் இளைஞர் முகாம்" எனும் தொனிப்பொருளில் 3 நாட்கள் வதிவிடப் பயிற்சி முகாமாக இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி இம்ரான் தலைமையில் மன்னார் டிலாசால் பாடசாலையில் ஆரம்பமான குறித்த இளைஞர் முகாமில் இளைஞர்களின் ஆளுமை விருத்தி உடல் ஆரோக்கியம், உளநல விருத்தி மற்றும் தொழில் பயிற்சி தொடர்பாக விரிவுரைகள் வழங்கப்பட்டதுடன் நடைமுறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் குறித்த இளைஞர் முகாமிற்கு சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாகாணப் பணிப்பாளர் முனாபர், மன்னார் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் மஜித், மன்னார் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சைமன் சில்வா, இலங்கை இளைஞர் கழக சம்மேளனப் பிரதிநிதிகளான யசோதரன் மற்றும் ஜோசப் நயன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இளைஞர் முகாமில் சிறப்பாக செயற்பட்ட இளைஞர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# முல்லையில் மைதானம் அமைக்க பொலிஸார் தடை

## கிளிநொச்சிக்குரிய காணியெனத் தெரிவிப்பு

(அக்கராயன்)


முல்லைத்தீவு அமதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஆரோக்கியபுரம் கிராமத்தில் பொது மைதானம் அமைப்பதற்கான வேலைகளை அக்கராயன் பொலிஸார் இடைநிறுத்தியுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலகத்தினால் 8 இலட்சம் நிதி வழங்கப்பட்டு ஆரோக்கியபுரம் பொது அமைப்புக்களினால் வேலைகள் தொடங்கப்பட்ட நிலையில் குறித்த வேலைகள் நடைபெறுகின்ற காணி கிளிநொச்சி மாவட்டத்திற்குரியது எனத் தெரிவித்து அக்கராயன் பொலிஸார் வேலைகளை இடைநிறுத்தியுள்ளனர்.

அமதிபுரம் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலையினைப் பொறுப்பாக செயற்படுத்துகின்ற மாதர் சங்கம் என்பன அக்கராயன் பொலிஸாரிடம் வேலை நடைபெறுகின்ற காணி முல்லைத்தீவு மாவட்டத்திற்குரியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் கிளிநொச்சி மாவட்ட வனவளத் திணைக்களம் காணியினை உறுதிப்படுத்தும்வரை வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஆரோக்கியபுரம் கிராமத்தில் சண்டைகள், விபத்துகள், காணிப் பிரச்சினைகள் ஏற்படும் போது முல்லைத்தீவு மாவட்டத்திற்குரியது என காரணங்கூறி ஐயன்கன்குளம் பொலிஸாரிடம் செல்லுங்கள் எனத் தெரிவிக்கும் அக்கராயன் பொலிஸார் துணுக்காய் பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் பொது மைதான வேலை நடைபெறும் போது மட்டும் கிளிநொச்சி மாவட்டம் என காரணங்கூறி வேலைகளை தடுப்பதா?, மைதானம் அமைக்கப்படுகின்ற பகுதி முல்லைத்தீவு மாவட்டத்திற்குரியது எனத் தெரிவிக்கும் பொது அமைப்புகள் மைதானத்திற்கு அருகிலான நிரந்தர வீடுகள் முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டது எனவும் தெரிவிக்கின்றனர். (9-350)

# அச்சகத்துக்குள் புகுந்த பாம்பு; சிதறி ஓடிய இளைஞர்கள்



(நெளுக்குளம்)

வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள அச்சகம் ஒன்றிற்குள் நேற்று பாம்பு ஒன்று புகுந்தமையால் குறித்த பகுதியில் சற்று நேரம் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் அச்சகத்திற்குள் நின்றிருந்த இளைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அலறியடித்துகொண்டு வெளியே ஓடினர். பின்னர் வர்த்தக நிலையத்தில் இருந்த பெட்டிஒன்றிற்குள் மறைந்திருந்த குறித்த பாம்பினை அங்கு நின்ற இளைஞர்கள் அகற்றியிருந்தனர். (9-299)

# பாரதம்

# காஷ்மீர் எல்லையில் பாக்.மீண்டும் தாக்குதல்



(காஷ்மீர்)
காஷ்மீரில் உள்ள பூஞ்ச் எல்லைக்கோட்டுப் பகுதியில் உள்ள இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தான் படையினர் கடும் தாக்குதல் நடத்தினர்.

மோர்ட்டார் குண்டுகளை வீசி யும் துப்பாக்கியால் சுட்டும் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை தாக்குதல் நடத்திய நிலை யில், இந்திய வீரர்களும் இந்த தாக்குதலுக்கு உரிய முறையில் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லைப் பகுதியில் அவ்வப்போது பாகிஸ் தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதல்களில் இந்திய இராணுவத்தை சேர்ந்த வீரர்கள் உயிரிழப் பதுடன் எல்லையோர கிரா மங்களில் வாழும் இந்திய மக்களும் கடும் பாதிப்புக்குள் ளாகி வருகின்றனர்.

அவ்வகையில், கடந்த 15 ஆண்டுகால வரலாற்றில் மிக அதிகமான அளவில் கடந்த 2018ஆம் ஆண்டில் மட்டும் பாகிஸ்தான் படைகள் 2936 முறை எல்லையோரத்தில் உள்ள இந்திய நிலை களின்மீது தாக்குதல் நடத்தியுள்ளது.இந்த ஆண் டிலும் தாக்குதல் தொடர்ந்து வருகிறது. (ஐ)

# சிரியாவில் போர் நி... குர்திஷ்கள் வெளி...



(அங்காரா)
துருக்கியுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி சிரியா வடக்கு எல்லையில் இருந்து குர்திஷ் படை யினர் வெளியேறினர்.

சிரியாவின் வடக்கு பகுதியில் இருக்கும் குர்திஷ் படையினரை விரட்டி யடித்துவிட்டு ஒரு பாதுகாப்பு மண்ட லத்தை உருவாக்கி அங்கு துருக்கி யில் உள்ள 36 இலட்சம் சிரிய அகதி களை குடியமர்த்த வேண்டும் என்று துருக்கி நினைக்கிறது.


இதற்காக சிரியாவின் வடக்கு பகுதியில் இருக்கும் குர்திஷ் இன படையினரை குறிவைத்து, துருக்கி இராணுவம் தொடர்ந்து 8 நாட்களாக தாக்குதல் நடத்தியது.

துருக்கியின் இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ள தோடு, 4 இலட்சத்துக்கும் அதிக மானோர் பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக துருக்கி மீது அமெரிக்கா பொரு ளாதார தடைகளை விதித்து, போரை நிறுத்தும்படி எச்சரித்தது.

அத்துடன் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக்பென்சும், வெளியு றவு அமைச்சர் மைக் போம்பி

# ஐ.என்.எக்ஸ்.மீடியா முறைகேடு வழக்கு ப.சிதம்பரம் பிணையில் விடுவிப்பு



(சென்னை)
ஐ.என்.எக்ஸ். மீடியா முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட ப.சிதம்பரம் நிபந் தனைகளுடன் கூடிய பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

அவரை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்லுமாறு உச்ச நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

மேலும் ப.சிதம்பரம் வெளிநாடு செல்லக்கூடாது, விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் உள்ளிட்ட சில நிபந் தனைகளையும் நீதிபதிகள் விதித்தனர்.

இதேநேரம் ஐ.என்.எக்ஸ். மீடியா முறைகேடு தொடர்பாக அமுலாக்கத்துறை தொடர்ந் துள்ள வழக்கிலும் ப.சிதம்பரம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை, 7 நாட்கள் காவலில் வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள். எனவே, சி.பி.ஐ. வழக்கில் பிணை பெற் றாலும் ப.சிதம்பரம் உடன டியாக சிறையில் இருந்து வெளி வர முடியாதென்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# முகநூல் பதிவால் நால்வர் உயிரிழப்பு

(பங்களாதேஷ்)
பங்களாதேஷ் நாட்டில் அண் மைக்காலமாக மத ரீதியாக வன் முறைகளை தூண்டும் இணையப் பதிவுகளால் அடிக்கடி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின் றன.

இந்தநிலையில், பொது மக்கள் அமைதியைப் பேண வேண்டும் என்று அந்த நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனா கோரிக்கை விடுத்தார்.

facebook

# நாடுகளிடையே இராணுவ பதற்றங்களை அதிகரிக்க அமெரிக்கா ஏவுகணை சோதனை மேற்கொள்ளலாம்

## ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் பரபரப்புத் தகவல்

(மொஸ்கோ)
உலக நாடுகளுக்கிடையே இராணுவப் பதற்றங்களை அதி கரிப்பதற்காக பசுபிக் பெருங்கடல் பகுதிகளில் அமெரிக்கா ஏவு கணை சோதனைகளை மேற் கொள்ளலாம் என்று ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அணுவாயுதப் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் விதமாக அமெ ரிக்கா மற்றும் சோவியத் ஒன் றியத்திற்கு இடையே கடந்த 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

நடுத்தர தொலைவு அணு ஆயுதங்கள் உடன்படிக்கை (ஐ.என்.எப்.) என்று அழை க்கப்படும் இந்த ஒப்பந்தம், நிலத்தில் இருந்து செலுத்த ப்படும் சிறிய மற்றும் நடுத்தர தூர அணு ஆயுத ஏவுகணைகளை இரு நாடுகளும் பயன்படுத்த தடை விதிக்கின்றது.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி அமெரிக்கா ஒப்பந்தத்தை விட்டு வெளியேறியதால் ஒப்பந்தம் இரத்தானதாக ரஷ்யா அறிவித் தது.

இந்நிலையில், நாடுகளி டையே இராணுவப் பதற்றங் களை உருவாக்க அமெரிக்கா, குறுகிய மற்றும் நடுத்தர தொலைவு ஏவுகணை சோத னைகளை மேற்கொள்ளலாம் என ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கை சோய்கு தெரிவித்துள்ளார்.

சீனாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு தொடர் பான 9 ஆவது சியாங்சன் மாநாட் டில் செர்கை சோய்கு கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட் டார். (ஐ)



# வெளிநாடு

## ...நிறுத்தம் ...ியேற்றம்

யோவும் நேரடியாக துருக்கிக்கு சென்று ஜனாதிபதி தாயீப் எர்டோகனை சந்தித்து இது குறித்து பேசினர்.

இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் சிரியாவின் வடக்கு பகுதியில் 5 நாட்களுக்கு போரை நிறுத்தி வைப்பதாக கடந்த வியாழக்கிழமை எர்டோகன் அறிவித்தார்.

இந்த 5 நாட்களுக்குள் துருக்கி 'பாதுகாப்பு மண்டலம்' என்று வரையறுக்கும் பகுதியில் இருந்து குர்து படையினர் வெளியேற வேண்டு மென துருக்கி கூறியது.

ஆனால் போரை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதலில் ஈடுபட்டதாக துருக்கி இராணுவமும், குர்து படையினரும் பரஸ்பர குற்றம் சாட்டின.

இதையடுத்து, செவ்வாய்க்கிழமைக்குள் குர்திஷ் படைகள் பாதுகாப்பு மண்டலத்தை விட்டு வெளியேறா விட்டால் தாக்குதல் மீண்டும் தொடங்கப்படும் என்றும், குர்துக்களின் தலை நசுக்கப்படும் என்றும் எர்டோகன் எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் துருக்கியின் எல்லையையொட்டி சிரியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ராஸ் அல்-அய்ன் நகரில் இருந்து குர்திஷ் படைகள் வெளியேறின. (ஐ)

---

நபிகள் நாயகத்தை இழிவு படுத்தும் வகையில் முகநூலில் அண்மையில் ஒரு பதிவிடப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் நால்வர் உயிரிழந்தனர்.

இணையப் பதிவுகளால் வெடிக்கும் வன்முறைகள் பங்களாதேஷ் பொலிஸாருக்கு பெரும் தலை வலியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

# சிரியாவின் வடகிழக்கில் சிக்கியுள்ள 60 இற்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் குழந்தைகள்

## சேவ் த சில்ட்ரன் அமைப்பு சுட்டிக்காட்டு

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடகிழக்கில் 60 க்கும் மேற்பட்ட பிரித்தானியாவுக்குச் சொந்தமான குழந்தைகள் நிர்க்கதி நிலையில் உள்ளதாக சேவ் த சில்ட்ரன் அமைப்பு சுட்டிக்காட்டியது.

பாதிப்புக்குள்ளாகியுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை முன்னர் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை விட இரு மடங்கு அதிகம் என்றும் பெரும்பாலானவர்கள் ஐந்து வயதுக்குக் குறைவானவர்கள் என்றும் மற்றும் பாழடைந்த முகாம்களில் மோசமான நிலையில் பாதிக்



கப்பட்டுள்ளனர் என்றும் சேவ் தி சில்ட்ரன் வெளிப்படுத்தியது.

குழந்தைகளின் வாழ்க்கை வன்முறை மற்றும் அச்சத்தால் நிறைந்திருக்கிறது.

ஆனால் சரியான கவனிப்புடன் அனு கினால் அவர்களை நல்ல நிலை க்குக் கொண்டுவரமுடியும் என்று சேவ் த சில்ட்ரன் அமைப்பின் மனிதாபிமானத் தலைவரான அலிசன் கிரிஃபின் கூறினார்.

அக்குழந்தைகளை பிரித்தானியாவுக்கு அழைத்து வருவதன் மூலம் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை எங்களால் கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

---

# அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் ஈரானின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது

## ஈரானின் எரிபொருள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(தெஹ்ரான்)

ஈரானிய எரிபொருள் துறைக்கு எதிராக அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகளால் அது பாதிக்கப்படவில்லை என்று ஈரானியப் எரிபொருள்துறை அமைச்சர் பிஜன் நம்தார் ஸங்கனே (Bijan Namdar Zanganeh) தெரிவித்தார்.

ஈரானிய எரிபொருள் துறையை முடக்க, அமெரிக்கா பலவிதமான முயற்சிகளை மேற்கொண்ட போதும், அது நிறைவேறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

மாறாக, ஈரானிடம் எரி பொருளை கொள்வனவு செய்யும் நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாகத் அமைச்சர் ஸங்கனே சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து, ஈரானின் எண்ணெய், எரிவாயுத் துறைகளில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க நெருக்குதலுக்கு



ஈரான் ஒருபோதும் அடிபணியாது என்றும் இந்த மாத ஆரம்பத்திலேயே அவர் கூறியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

---

# லெபனானில் உள்ளகப் போராட்டங்களின் எதிரொலி சவுதி அரேபிய, ஐக்கிய அரபு அமீரக மக்கள் வெளியேற்றம்

(லெபனான்)

லெபனானில் இடம்பெற்று வரும் உள்ளக போராட்டங்கள் காரணமாக சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகள் லெபனானில் உள்ள தங்களின் பிரஜைகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு தீர்மானித்தன.

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், லெபனான் அரசாங்கம் பொருளாதார சீர்திருத்தங்கள், புதிய வரிகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தியமைக்கு எதிராக கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

நாட்டின் பல்வேறு இடங்கள் வன்முறை களமாக மாறின. அனைத்துக் குடிமக்களுக்கும் உணவு, எரிபொருள், ஏனைய அடிப்படை தேவைகளை அரசாங்கம் நிறைவேற்றி வைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இல்லையேல் பதவி விலக வேண்டும் என்று பொதுமக்கள் அரசாங்கத்திற்கு எதிராக முழக்கமிட்டு வருகின்றனர். இதனால் லெபனானில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகள், லெபனானில் உள்ள தங்களது குடிமக்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வரும் முயற்சியில் ஈடுபட்டன.

இதுவரை 132 சவுதி அரேபிய பிரஜைகள், ரபிக் ஹரிரி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சவுதி அரேபியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக லெபனானில் உள்ள சவுதி அரேபிய தூதரகம் தெரிவித்தது. (ஐ)

---

# தேசிய பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக ஓரணியில் திரண்ட ஆஸி நாளிதழ்கள்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து அந்த நாட்டின் பிரபல நாளிதழ்கள் தங்களுக்குள் உள்ள போட்டிகளை மறந்து ஒரே குரலில் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டன.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) காலை வெளியான நியூஸ் கோர்ப் அவுஸ்திரேலியா மற்றும் நைன் மாஸ்ட்ஹெட்ஸ் ஆகிய இரண்டு பெரும் நாளிதழ்களும் தங்களின் முதல் பக்கத்தில் செய்தியை கறுப்பு மையால் மறைத்து அதற்கு மேலே 'ரகசியம்' என்ற வாசகத்துடன் கூடிய சிவப்புநிற முத்திரையுடன் வெளியாகியிருந்தன.

இந்த நூதனப் போராட்ட முறை அந்த நாட்டில் உள்ள தேசிய பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராக நடத்தப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் உள்ள தேசிய பாதுகாப்பு சட்டம் தங்களின் செய்தி சேகரிப்பு மற்றும் தயாரிப்புகளை பாதிப்பதாகவும், இரகசிய கலாசாரம் ஒன்றை உண்டாக்க முயல்வதாகவும் நாளி தழ்கள் குற்றம்சுமத்தின.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய அரசாங்கம் தாங்கள் ஊடக தர்மத்தை மதிப்பதாகவும், அதே வேளையில் நாட்டில் யாரும் சட்டத்தை விட பெரியவர்கள் இல்லை என்பதை வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

தே
பிட்
(ஐ)

# கூட்டமைப்பின் கொள்கைக்கு ஐ.தே.க.நிச்சயம் அடிபணியும்!

## மகிந்த அணி அழுத்தம் திருத்தம்

(மாத்தறை)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் அடிபணியும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு கூட்டமைப்பினர் ஆதரவு வழங்க மாட்டார்கள். நாட்டைப் பிளவுபடுத்தும் நிபந்தனைகளை எவ்வித மறுப்புமின்றி நிராகரித்துள்ளோம் என்று மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**



தேசிய நல்லிணக்கத்தை முன்னிலைப்படுத்தி இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழும் முஸ்லிம் தமிழ் மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்குகின்றார்கள். அடிப்படைவாதிகளினதும், பயங்கரவாதி சஹ்ரானின் சகாக்களின் ஆதரவும் பாரதூரமானது எனவும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை - திக்வெல்ல நகர பொது மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பினர் உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்த 13 கோரிக்கைகளை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ எவ்வித இழுத்தடிப்புக்களுமின்றி நிராகரித்தார். நாட்டை மீண்டும் இருண்ட யுகத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு வழங்குவோம்.

நாட்டைப் பிளவுபடுத்தும் கோரிக்கைகளுக்கு நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தவிர பிறிதொரு நோக்கம் அவர்களுக்குக் கிடையாது. அனைத்து மக்களுடன் இணைந்து இலங்கையராக வாழும் தமிழ்-முஸ்லிம் மக்கள் நிச்சயம் எமக்கு ஆதரவு வழங்குவார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும். பொதுஜன பெரமுனவும் கொள்கையை முன்னிலைப்படுத்தியே ஒன்றிணைந்துள்ளன. கடந்த நான்கரை வருட காலமாக நாட்டில் இடம்பெற்ற அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்கள் அனைத்தும் நவம்பர் 16ஆம் திகதியுடன் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் பெறுபேறுடன் ஜனாதிபதித் தேர்தலை ஒப்பிட முடியாது என்று குறிப்பிடும் ஐக்கிய தேசியக் கட்சியினர் அந்தப் பிரதேச சபைத் தேர்தலை வெற்றிகொள்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் மறைமுகமாக அரச அதிகாரங்கள் மூலம் தேர்தல் சட்டத்திற்கு முரணான வகையில் முன்னெடுத்தனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே அதிகளவிலான தோல்விகளை எதிர்கொண்டுள்ளார். அதாவது இடம்பெற்ற 24 தேர்தல்களில் 21 தேர்தல்களில் 29 சதவீத அடிப்படையில் தோல்வியடைந்துள்ளார்.

இம்மாதம் இடம்பெற்று முடிந்த எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை வெற்றிகொள்ளும் பொறுப்புக்கள் அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைக்கப்பட்டது. தேர்தலை வெற்றிகொள்ள அவர் அனைத்து அரச அதிகாரங்களை பிரயோகித்தும் மக்களாணையைப் பெற முடியவில்லை. பிரதமர் ரணில் பெற்ற வாக்குகளை விட குறைவாகவே அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் வழிநடத்தலின் ஊடாகப் பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் கருத்துக்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவரது கருத்துக்களைப் போன்றதாகவே. காணப்படுகின்றன. அமைச்சரவை உறுப்பினர்கள் கொக்கேய்ன் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம்சாட்டினார். இக்குற்றச்சாட்டு உண்மை என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கவில்லை. தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. மாறாக சர்வதேச மட்டத்தில் யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். இதற்கு 2015ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சர் பதவி வகித்த மங்கள சமரவீர என்றும் பொறுப்புக் கூறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மலையகத்தில் கடும் மழை மக்களின் வாழ்க்கை பாதிப்பு!

(ஹற்றன்)

மலையகத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளானதுடன் தீபாவளி வர்த்தகமும் சோபையிழந்தது.



மலையகத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையையடுத்து ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் நிலவி வருவதுடன் கலுகல, பிட்டவர, கினிகத்தேனை, கடவல, வட்டவளை ஆகிய பகுதிகளிலும், ஹற்றன், நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டகலை, சென்கிளயார், தலவாக்கலை, ரதல்ல, நானு ஓயா பகுதிகளிலும் அடிக்கடி பனிமூட்டம் காணப்படுவதனால் இவ்வீதிகளைபயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாக செயற்படுத்துமாறு ஹற்றன் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

நீரேந்தும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக அடை மழை பெய்வதால் காசல்ரீ, கெனியோன், மவுசாகலை, லக்ஸபான, மேல்கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் மிக வேகமாக உயர்ந்துள்ளதுடன் விலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் வான்பாய்கின்றது.

எனவே தாழ் நிலப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### அலுவலக அரட்டைகள்!

ரொம்ப நாளைக்கு பிறகு ஒரு நண்பரைப் பார்த்தேன். "உங்க கூட உட்கார்ந்து கொஞ்சநேரம் அரட்டை அடிக்கணும் போல ஆசையா இருக்கு!" என்றேன்.

"அப்படியென்றால் நேரா எங்க ஆபிசுக்கு வந்திடுங்க.. அதுதான் வசதி!" என்றார்.

இப்படி அரட்டை அடிப்பதற்கு ஆபிஸ்தான் வசதியான இடம் என்று நினைக்கிறவங்க பலபேர் உண்டு! அவர்களுக்கெல்லாம் கூடிய சீக்கிரத்திலே ஒரு இடைஞ்சல் வந்து சேரும் போல இருக்கு!

கைக்கு அடக்கமா பிஸ்கட் வடிவத்திலே இரண்டு அங்குல அகலத்திலே சதுர வடிவத்திலே ஒரு கருவி தயார் பண்ணியிருக்கிறார்கள். இது அரட்டை அடிக்கிறவர்களையெல்லாம் கண்டுபிடித்து விடுமாம்.

**infra red rays** என்று சொல்கிறோம் அல்லவா. அகச் சிவப்புக் கதிர்கள் அதனால் இயங்குது. ஆபிசில வேலை செய்கிறவர்கள் சீருடையிலே இந்த கருவியை பொருத்தி விட வேண்டியது அல்லது பையிலே கூட வைத்திருக்கலாம். ஒவ்வொருவரின் கருவிக்கும் ஒரு நம்பர் உண்டு. ஒவ்வொன்றும் வேற வேற சமிக்ஞைகளை அனுப்பும்.

இதை ஒரு கம்பியூட்டர் பதிவு செய்திருக்கும். அந்த ஊழியர் எங்கே போனாலும் அதை இது பதிவு செய்து கொண்டே வரும். முன் ஹோலில இருக்காரா? கண்டீன்லே இருக்காரா? பாத்ரூம்ல இருக்காரா? எல்லாம் பதிவாகிடும்!

பல ஊழியர்கள் ஒரே இடத்திலே கூடி... கும்பலா இருந்தாலும் சரி... ஆபீசுக்குள்ளே யாரும் போகக்கூடாத முக்கியமான இடத்துக்கு ஒருத்தர் ரகசியமாக போனாலும் சரி.. கம்பியூட்டர் காட்டிக் கொடுத்துவிடும்.

மேல் நாடுகளிலே பல ஆபீஸ்களிலே இப்ப இதைப் பயன்படுத்துகிறார்களாம்! இந்தக் கருவியை அணிந்திருக்கிறவர் தனக்குரிய இருக்கையிலே அமர்ந்தவுடனே அவர் மேசையில் இருக்கிற கப்பியூட்டர் அவருடைய வருகையைப் பதிவு பண்ணிடும்!

சரி... இந்தக் கருவியை யாருக்கும் தெரியாம வெளியே எடுத்து வைத்துக்கொண்டு ஏமாத்திடலாம் என்று நினைச்சாலும்.. அதுவும் முடியாது.

நம்ம ஊருக்கு இந்தக் கருவி வந்தா நல்லது தான். ஆபீஸ்ல வேலை செய்யாம அடுத்தவங்க அறைக்குப் போய் அரட்டை அடிக்கிறது. இரகசியக் கோப்புகள் வைத்திருக்கிற அறைகளுக்குள்ளே போய் நோட்டம் பார்க்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்திடலாமே!

சிலபேர் வேணும்னு வேலை நேரம் பார்த்து "பாத்ரூம்" எங்கேயிருக்கு என்று தேடிப் போய் விடுவது உண்டு. அவர்களையெல்லாம் இது சுலபமாக கண்டுபிடித்து சொல்லிடும்!

இந்தக் கருவியாலே வேறே சில பிரயோசனமும் உண்டு. ஒரு பெரிய அதிகாரி ரூமுக்குள்ளே குறிப்பிட்ட சில பேர்தான் நுழையணும் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அதுக்குத் தகுந்த மாதிரி "செட்" பண்ணி வைத்திருக்கலாம். அப்படி வைத்து விட்டா அந்த குறிப்பிட்ட சிலபேர் தான் கதவை திறக்க முடியும்.

அதே மாதிரி பணம், நகை இதுமாதிரி விலை உயர்ந்த பொருட்கள் இருக்கிற அறைக்குள்ளே குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே போய்விட்டு வருவது மாதிரி செய்திடலாம்.

இப்பபிரிட்டன் போன்ற பல இடங்களிலே இந்தக் கருவியை சோதனை முறையிலே பயன்படுத்திக்கொண்டு வருவார்களாம்.

வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஆபத்து காலத்திலே உதவி செய்வதற்கும் இந்தக் கருவியை பயன்படுத்தலாம்.

இப்ப எல்லாம் ஆபிஸ்லே வேலை செய்கின்றவர்கள் எவ்வளவு விழிப்புணர்ச்சியோட இருக்கிறார்கள் தெரியுமா? அன்றைக்கு இப்படித்தான் சேர்.. ஒரு ஆபீஸ் நண்பரைப் பார்த்து "இன்றைக்கு என்ன சேதி சேர்? "என்றேன்.

"சரியா ஞாபகம் இல்லைங்க! "என்றார். "அதுதான் கையிலே நியூஸ் பேப்பர் வைத்திருக்கிறீர்களே அதைப் பார்த்தா தெரியுமே! "என்றேன்.

"அது எப்படி சேர் தெரியும்? இது நேற்றைய பேப்பர் ஆச்சே!" அப்படி என்றார்.!

# சேர்ந்தும் கெடுத்த சீதக்காதிகள்

உள்ளம் மீண்டும் சோர்வில்,
யாரும் எதிர்பாராத வகையில்,
பல்கலைக்கழக மாணவர்களின் தூண்டுதலால்,
சேராத நவக்கிரகங்கள் ஒன்று சேர்ந்தாற்போல,
திசைக்குத் திசை திரும்பி நின்ற நம் தலைவர்கள் ஐவர்,
ஒரே திசைநோக்கி ஒன்று சேர்ந்த அதிசயம்,
ஒருசில நாட்களின்முன் நடந்தது.
பலராலும் எதிர்பார்க்கப்பட்ட தலைவர்களின் ஒற்றுமை கண்டு,
தமிழ்மக்கள் மகிழ்ந்து போனது உண்மை.
ஆனால்,
இதுவரைகாலமும் இவர்கள் எப்படி சேராமல் நின்று இனத்தைக் கெடுத்தார்களோ,
அதுபோலவே சேர்ந்து நின்றும் இனத்தைக் கெடுத்து விட்டார்களோ? என,
இன்றைய நிலையில் எண்ணத்தோன்றுகிறது.

தத்தம் கட்சிநலம், பதவிநலம் என்கின்ற பேரலைகளுக்குள்,
தம் பிரிவினையால் இனநலம் என்கின்ற பெரிய விடயத்தை,
தொலைத்து நின்ற அத்தலைவர்கள்,
இப்போது "தேரை இழுத்துத் தெருவில் விட்ட" கதையாய்,
தமது தீர்க்கதரிசனம் இல்லாத செயற்பாட்டால்,
மீண்டும் இனத்தைச் சங்கடத்துக்கு
உள்ளாக்கியிருக்கின்றனர்.

வரப்போகும் ஜனாதிபதி தேர்தலின்,
பெரும்பான்மையின முக்கிய கட்சிகளின்
தலைவர்களுக்கு,
தமிழர் சார்பான 13 நிபந்தனைகளை முன்வைத்து,
அதனை ஏற்க முன்வரும் ஜனாதிபதி வேட்பாளருக்கே,
தமது ஆதரவைத் தெரிவிப்போம் என,
அபூர்வமாய் இணைந்த ஐந்து தலைவர்களும்,
ஒருமித்து ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர்.
அங்குதான் பிரச்சினை ஆரம்பமாகியுள்ளது.

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும்,
தமிழர் நலம் சார்ந்தவை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.
ஆனால் அந்நிபந்தனைகள் வைக்கப்பட்ட காலம் தான் தவறுபோல் தோன்றுகிறது.
இன்னும் பேரினத்தாரில் பலர் தமிழர் நலன்களை கிஞ்சித்தும் ஏற்கத் தயாராயில்லை.
இந்நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களும் வாக்களிக்கும் ஜனாதிபதித் தேர்தலில்,
சிறுபான்மைத் தமிழர் நலம் நோக்கிய நிபந்தனைகளை ஏற்று,
பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பகையைத் தேடிக் கொள்ள,
எந்த சிங்களத் தலைவர்தான் முன்வரப்போகின்றார்?
ஒன்றுசேர்ந்த நம் தலைவர்கள் இதைக்கூட சிந்திக்காமல்,
பொருத்தமற்ற நேரத்தில், முன்வைத்திருக்கும் பகிரங்க நிபந்தனைகளால்,
அனைத்துப் பேரின ஜனாதிபதி வேட்பாளர்களாலும்,
நிராகரிக்கப்படும் நிலைக்கு நம் இனம்
தள்ளப்பட்டிருக்கிறது.


கேட்ட விடயங்கள் சரியானவை தான்.
கேட்ட நேரந்தான் பொருத்தமற்றது.
மேற்படி நிபந்தனைகளை,
ஜனாதிபதி வேட்பாளர்களுடன் தனித்துப் பேசுகையில்,
ரகசியமாய் வலியுறுத்தியிருக்கவேண்டும்.
நம்தலைவர்களின் கூட்டணி இந்நிபந்தனைகளைப் பகிரங்கமாய் முன்வைத்ததால்,
இனவாத ஊடகங்களினூடு அச்செய்தி பரப்பப்பட்டு,
பேரினத்தார் மத்தியில் பெருநெருப்பாய் அது மூண்டிருக்கிறது.
இன்று அதுபற்றிப்பேசவே பேரினத்தலைவர்கள் மருண்டு நிற்கின்றனர்.
யதார்த்தத்திற்கு ஒவ்வாத இலட்சியங்கள் என்றும் நிலைக்கப்போவதில்லை.
ஒரு பேச்சுக்காய் மேற்படி நிபந்தனைகளை,
ஒரு சிங்களத் தலைவர் ஏற்பதாகவே வைத்துக் கொள்வோம்.
(அது நடக்காது என்பது சர்வநிச்சயம்.)
தேர்தல் வெற்றியின் பின் அவர் அவற்றை நடைமுறைப் படுத்துவார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?
அடுத்தடுத்து பல ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட வரலாற்றைப் பார்த்தபின்பும்,
மீண்டும் ஒரு ஒப்பந்தத்திற்குத் தயாராகும் நம் தலைவர்களை என்னென்பது?
பகிரங்கமாய் வைக்கப்பட்ட இந்நிபந்தனைகள் சிறு பிள்ளைத்தனமானவை என்பதில்,
எந்த ஐயத்திற்கும் இடமில்லை.

தமிழர் உரிமைபற்றி சிங்களத் தலைவர்கள் பேசவே தயாராகவில்லை.
நாமோ சமஷ்டி என்றும் ஒற்றையாட்சி என்றும்,
ஒருநாட்டுக்குள் இரு தேசம் என்றும் என்னென்னவோ சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
சபையில் சாப்பாடே இல்லை என்று சொன்ன பிறகு,
போட்ட இலையில் ஓட்டை என்று சண்டை பிடித்தானாம் ஒருவன்.
நம் நிலையும் அதுவாகத்தான் இருக்கிறது.
கடந்த அரை நூற்றாண்டாய்பேச்சுவார்த்தை, சண்டை என,
பலவழிகளாலும் நம் உரிமை நோக்கி முயன்று தோற்றுவிட்டோம்.
இன்னும் உலக அரசியலுக்கேற்ப புதுவழி காணாமல்,
அதே பழைய வழிகளில் உரிமை பெற எண்ணும் நம் தலைவர்களை என்சொல்ல?
ஒருவேளை தமிழர் சார்பான ஓர் தீர்வுத்திட்டம் வந்தாலும்,
அது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாய் வெற்றி பெறவேண்டும்.
பின்னர் சர்வஜன வாக்கெடுப்பில் அது
அங்கீகரிக் கப்படவேண்டும்.
இதுதான் இன்றைய யதார்த்தநிலை.
இதெல்லாம் நடக்கவா போகிறது?
அத்திவாரமே இல்லாமல் கட்டடம் கட்ட முயல்கிறார்கள் நம் தலைவர்கள்.

மேற்சொன்னவற்றை எல்லாம் அறியாதவர்கள் போல்,
யதார்த்தம் அறியாமல் 13 நிபந்தனைகளை,
பகிரங்கமாய் முன்வைத்திருக்கும் நம் தலைவர்களின் செயல், நகைப்பூட்டுவதாய் இருக்கிறது.
மேற்படி நிபந்தனைகளால் இனத்திற்கு விளையக்கூடிய நன்மை தீமைகளை,
நம் தலைவர்கள் ஏனோ ஊகிக்கத் தவறி விட்டார்கள்.
வரும் பொருள் அறிவதில் ஏற்பட்ட வறுமை.
முன் சொன்னாற்போல மேற்படி நிபந்தனைகள் பற்றி ஜனாதிபதி வேட்பாளர்களுடனான,
தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளில் அழுத்தி உரைத்து ஆதரவளித்தபின்,
அந்நட்பால் அவற்றைப் பெற்றிருக்கவேண்டுமேதவிர,
இங்ஙனம் அந்நிபந்தனைகளைப் பகிரங்கப்படுத்தியது மாபெரும் தவறேயாம்.
சொற்ப இலாபத்திற்காக பெரிய இலாபத்தை இழக்க,
எந்த மடையனும் முன்வரமாட்டான் எனும் உண்மையை,
ஏன்தான் நம் தலைவர்கள் சிந்திக்கத் தவறினார்களோ? தெரியவில்லை.

முக்கிய வேட்பாளர்கள் மூவரும் இவர்தம் நிபந்தனைகளை,
முற்றாக நிராகரித்துவிட்ட இன்றைய நிலையில்,
அடுத்த நடவடிக்கை பற்றி நம் தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?
எமது நிலையிலிருந்து இறங்கமாட்டோம் என,
இவர்கள் பிடிவாதம் பிடித்தால்,
இவர்களைக் கைவிட்டு தேர்தலைச் சந்திக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் தயாராகிவிட்டார்கள்.
ஒருவேளை அங்ஙனம் நிகழ்ந்தால்,
வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில்,
வென்றவர், தோற்றவர் எனும் இருவர்க்கும் நம் இனம் பகையாகும்.
அதனால் யாரோ ஒருவரால் நம்மீது அறம்மீறிய அழுத்தம் செலுத்தப்படுகையில்,
பாராளுமன்றினுள் நமக்குச் சார்பாகக் குரல் கொடுக்க எவரும் இல்லாது போவர்.
இந்நிலை நம் இனத்திற்கு உகந்ததா? சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாகவோ அல்லது,



-கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்-

தம் நிபந்தனைகளை முன்னிலைப்படுத்துமுகமாக,
சிவாஜிலிங்கத்தை ஆதரவளிக்கப்போவதாகவோ,
இவர்கள் முடிவெடுக்கும் பட்சத்திலும் மேற்சொன்னது தான் நடக்கப்போகிறது.
ஒருவேளை இனி இவர்கள் தம் நிபந்தனைகளை கைவிட்டு இறங்கி வந்தாலும்,

நம் பலயீனம் தெரிந்து எதிரிகள் மேலும் பலம் பெறுவார்கள்.
ஏலவே இந்தத் தலைவர்களோடு இணையமாட்டோம் என்று பிரிந்து நிற்கும்,
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எதிரிகளின் சறுக்கல் கண்டு எள்ளிநகையாடுவார்.
"ஏறினால் கழுதைக்குக் கோபம் இறங்கினால் முடவனுக்குக் கோபம்" என்ற நிலையில்,
என்ன செய்யப் போகிறார்கள் நம்பஞ்சமூர்த்திகள்?
மொத்தத்தில் நம் தலைவர்களின் கூட்டுமுயற்சி,
நம் இனத்திற்கான வேட்டு முயற்சியாய் ஆகிவிட்டது,
விதியின் பிழை!

அபூர்வமாய் நிகழ்ந்த நம் ஐந்துதலைவர்களின் கூட்டு,
புலி வாலைப்பிடித்த கதையாய் ஆகியிருக்கிறது.
விட்டாலும் சரி பிடித்தாலும் சரி கடி விழப்போவது நிச்சயம்.
காலம் அறிந்து ஆழச்சிந்திக்காமல் எதிரியின் மூக்கைத் தொட்டுவிட்டு,
இப்போது முழிபிரட்டி நிற்கிறார்கள் நம் தலைவர்கள்.
யாரினது வழிகாட்டலோ அல்லது அவசரப்பட்ட கைகோர்ப்போ,
மீண்டும் நம் தலைவர்களால் இனம் சிக்கலுக்குள் மாட்டியிருக்கிறது.
இதுநாள்வரை சேராது நின்று இனத்தைக்கெடுத்த சீதக்காதிகள்,
இப்பொழுது மீண்டும் சேர்ந்து கெடுத்திருக்கிறார்கள்.

அதிமானம் அரசர்க்குக் குற்றம் என்கிறான் வள்ளுவன்.
ஒரு தலைவன், பிழையான ஓர் முடிவை எடுத்து விட்டு,
மானம் காப்பதாய்ச்சொல்லி அம்முடிவில் வலிந்து நிற்றல்,
அவன் இனத்தை அழிக்கும் என்பது வள்ளுவன் கருத்து.
இதற்கான முன் உதாரணம் வேண்டுவோர்,
முன்னாள் முதலமைச்சரின் செயற்பாடுகளைக் காண்பார்களாக!
அவரை மட்டும் சொல்வது சரிதானா?
இதைத்தான் நம் முன்னைத் தலைவர்கள் பலரும் செய்தார்கள்.
காலம் அறியாமல் இடமறியாமல், வலியறியாமல் செயற்பட்ட,
நம் தலைவர்களின் செயலால் நம் இனத்தார் அரசியல் அநாதைகளாகி நிற்கின்றனர்.

எங்ஙனம் இப்பிரச்சினை தீரப்போகிறது?
இத்தலைவர்கள் கட்சி நலனுக்கு அப்பால் சிந்திக்கப்போவதில்லை.
இவர்களை ஒன்றிணைத்த இளையோரே,
இவர்தமக்கு வழிகாட்டி இனத்தைக் காக்கட்டும்.
இப்போதைக்கு அது ஒன்றே வழியாம்.

# பிரிகேடியர் பிரியங்கவின் விலக்குரிமையை மதிக்க வேண்டும்

## பிரித்தானியாவிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவின் பொது ஒழுங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு, இராஜதந்திர விலக்குரிமையுள்ளது என்றும், அதனை பிரித்தானியா மதித்து நடக்க வேண்டும் என்றும் இலங்கை கோரியது.

2018 பெப்ரவரி 4ஆம் திகதி லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களை நோக்கி, கழுத்தை அறுத்து விடுவது போன்று பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ எச்சரிக்கை செய்திருந்தார்.

இந்த விவகாரத்தால் எழுந்த நெருக்கடிகளை அடுத்து, இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.



எனினும், அவருக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்தில் மயூரன் சதானந்தன் என்பவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மீள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இந்த வழக்கு வரும் நவம்பர் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், லண்டனிலுள்ள தூதரகத்தில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இராஜதந்திரியாக பணியிலிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்பதால், அவருக்கு வியன்னா இராஜதந்திர உறவுகள் குறித்த 1961ஆம் ஆண்டின் பிரகடனங்களின் அடிப்படையில் விலக்குரிமையுள்ளது என்று தெரிவித்தது.

இந்தக் கடப்பாட்டை பிரித்தானிய அரசாங்கம் மதிக்க வேண்டும் என்று கோருவதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (இ-7)

# இனவாதத் துரோகக்கும்பலை எதிர்த்து ஓர் அணியாக நின்று முறியடிக்க வேண்டும்

## சிறுபான்மை மக்களிடம் நஸீர் வலியுறுத்து



(ஏறாவூர்)

இந்நாட்டில் கோத்தபாயவின் ஆட்சி அமையுமாயின் சிறுபான்மையினர் நிம்மதியாக வாழ முடியாது என்பதுதான் முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவாகும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஏறாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம்கள் உயிருக்கு அஞ்சி வயற்காடுகளுக்குள் மறைந்து வாழ்கின்ற ஒரு சமூகமாக இருக்க முடியாது. முஸ்லிம்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். ஜனநாயகத்தையும் அமைதியையும் விரும்பும் பெரும்பாலான மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களிப்பார்கள்.

அதுதான் யதார்த்தம். தமிழ் சமூகம் எவ்வாறு அடக்கி ஆளப்பட்டதோ அதைவிட மிக மோசமான முறையில் முஸ்லிம் சமூகத்தை அடக்கி ஆள வேண்டும் என இனவாதக் கூட்டம் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது. இதைத்தான் வெலிகம, பேருவளை, களுத்துறை, கண்டி, திகன மற்றும் அம்பாறையில் என பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த இனவாத துரோகக் கும்பலை எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஒரு அணியாக நின்று முறியடிக்க வேண்டும். நமது வாழ்வு, இருப்பு, தனித்துவம், மனித உரிமை போன்ற அனைத்தையும் குழிதோண்டி புதைக்குமளவுக்கு அச்சமும் பயமும் பீதியும் குடிகொண்டவர்களாக நாம் நடுங்கிக் கொண்டிருந்தோம். அந்த நிலைமை தொடர்ந்தும் இந்த நாட்டில் இருக்கக் கூடாது.

வெற்றி பெறக்கூடிய வேட்பாளரை இன்று களத்துக்குக் கொண்டு வந்த பெருமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு இருக்கிறது.

கடந்த காலங்களில் பிரேமதாஸவை, சந்திரிகாவை ஆதரித்து பல சாதனைகள் புரிந்திருக்கிறோம். அதேவேளை சிறுபான்மையினருக்கெதிரான மகிந்த ராஜபக்ஷவின் அராஜகத்தை தோற்கடிப்பதிலும் நாம் முன்னின்றோம்.

ஆகவே, நாம் எடுத்த முடிவுகள் ஒருபோதும் கைசேதப்படக் கூடியதல்ல. எனவே, இந்த சமூகப் பணியில் நாம் அனைவரும் தனித்துவம், ஜனநாயகம், எதிர்காலம், வாழ்வு இருப்பு, நிம்மதி எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு உறுதியாக சிறுபான்மையினரை அனுசரித்து ஆட்சி செய்யக்கூடிய சஜித்தை ஆதரித்து ஜனாதிபதியாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது.நூலகத்தினர் நூலக நடமாடும் சேவையை முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பாரதி முன்பள்ளியில் முதலாவது நூலக நடமாடும் சேவை இடம்பெற்றது. இதன் போது முன்பள்ளிச் சிறார்களின் அறிவுத் திறனை விருத்தி செய்யும் வகையிலான செயற்பாடுகளை நூலகத்தினர் முன்னெடுத்தனர். சாவகச்சேரி பொது நூலக நூலகர் செ.செல்வக்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பாரதி முன்பள்ளி ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: சுபேசன்)

# செய்தித்துளிகள்

## பிரிட்டனுக்காக இலங்.உயர்ஸ்தானிகர் வடக்கு ஆளுநர் லண்டனில் சந்திப்பு



(லண்டன்)

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மனிஷா குணசேகர-ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் லண்டனிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

லண்டனுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஆளுநர் உயர்ஸ்தானிகரை சந்தித்தார்.

இச் சந்திப்பின்போது வடமாகாணத்திற்கு பிரித்தானியாவின் முதலீட்டாளர்களை அழைத்து வருவது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கு பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உதவ வேண்டுமென்றும் ஆளுநர் கேட்டுக் கொண்டார். (இ-5-10)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

(பலாங்கொடை)

பலாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலாங்கொடை நகரத்தில் உயர் மின்னழுத்தம் கொண்ட மின் கம்பம் ஒன்றில் பனர் ஒன்றை பொருத்த முற்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மரண அறிவித்தல் பனர் ஒன்றை மின்கம்பத்தில் பொருத்த முற்பட்ட சந்தர்ப்பத்தில் மின்சாரம் தாக்கி குறித்த நபர் உயிரிழந்தார்.

பலாங்கொடை, பெலிஹூல் ஓய பகுதியை சேர்ந்த 38 வயது நாகேஷ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## புகையிரதம் தடம்புரள்வு



(அவுக்கன)

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்ட புகையிரதம் அவுக்கன பகுதியில் நேற்று அதிகாலை தடம்புரண்டது.

இதனால் குறித்த பகுதிக்கான புகையிரத சேவை தற்காலிகமாக பதிப்படைந்தது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 260 | 210 | 300 |
| தக்காளி | 160 | 180 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 100 | 80 |
| கோவா | 140 | 140 | 100 | 160 |
| கரட் | 140 | 160 | 120 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 160 | 160 | 80 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 140 | 200 |
| பாகற்காய் | 300 | 260 | 210 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 90 | 120 |
| பயற்றங்காய் | 220 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 160 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 250 | 180 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 170 | 200 |
| போஞ்சி | 120 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 80 | 80 |
| கீரை-1பிடி | 50 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 400 | 150 | — |
| வெங்காயப்பூ | 300 | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 150 | 120 |

# எதுவும் தெரியாதென்று கூறுபவரை நாட்டின் ஜனாதிபதியாக்கலாமா?

## கோத்தாவுக்கு தம்பர அமில தேரர் எதிர்ப்பு

(இராஜகிரிய)

மக்களின் பெறுமதிமிக்க வாக்கை நாட்டிற்குத் தேவையில்லாத ஜனாதிபதிக்கு வழங்காதீர்கள். தன்னகத்தே பல்வேறு திறமைகளைக் கொண்ட ஜனாதிபதியே நாட்டுக்குத் தேவை. அவருக்கே உங்களின் வாக்கை வழங்குங்கள் என்று தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

ஆரோக்கியமிக்க ஜனாதிபதியை நாட்டிற்காகத் தெரிவு செய்யுங்கள் என்றும் தேரர் கோரிக்கை விடுத்தார். சிவில் சமூக மற்றும் தொழிற்சங்க ஒன்றியம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ராஜகிரியவில் ஊடகச் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டிற்குப் பொருத்தமில்லாத ஒரு வேட்பாளர். தான் கலந்து கொள்ளும் கூட்டங்களில் நாட்டின் அபிவிருத்தி பற்றி எவ்வித கருத்துக்களையும் உரைகளையும் முன்வைக்க முடியாத ஒரு கேள்விக்கு சுயாதீனமாக பதிலளிக்க முடியாத ஒரு வேட்பாளர் நாட்டிற்கு எவ்விதத்தில் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியை எதிர்காலங் களில் முன்னெடுப்பார் என்பது சந்தேகத்திற்குரியது.

போர்க்காலங்களில் தான் யுத்த படைகளுக்கு தலைமை தாங்கவில்லை, இராணுவத் தளபதியே அனைத்தையும் தலைமை தாங்கினார். தனக்கு இது குறித்து எதுவும் தெரியாது என்று பதில் சொல்லாமல் தப்பித்துச் செல்லும் ஒருவரை நம்பி எவ்வாறு நாட்டை ஒப்படைப்பது? திடகாத்திரமான ஜனாதிபதி வேட்பாளர் எனின் திடகாத்திரமாக உரையாற்ற வேண்டும். எனக்கு எதுவும் தெரியாது தெரியாது என்று தப்பித்துச் செல்ல முற்படத் தேவையில்லை. ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஒரு நாளைக்கு ஆறு கூட்டங்களில் கலந்து கொள்கிறார். தனது உரைகளை தைரியமாக மக்களுக்கு முன்வைக்கிறார், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு தயங்காமல் பதிலளிக்கக் கூடியவர். நாட்டின் நிர்வாகி என்றால் இவ்வாறு இருக்க வேண்டும்.

நாட்டிற்குத் தன்னை திறமையான நிர்வாகி என்று கூறிக் கொள்ளும் கோத்தபாய நாட்டின் நிர்வாகம் பற்றி மக்களின் முன்னிலையில் தெளிவூட்ட தைரியம் இல்லாதவராகவே இருக்கிறார். நாட்டின் பிரஜாவுரிமையை முழுமையாகப் பெறாத ஒரு வேட்பாளர் அமெரிக்கப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் நாட்டின் ஜனாதிபதியென்பது நாம் அனைவரும் சிந்திக்கக் கூடிய விடயமா கும்.

பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்ய நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். மேலும் இங்கு உரையாற்றிய பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர, அமெரிக்காவின் பிரஜாவுரிமையை நீக்கியமை தொடர்பில் இன்னமும் கோத்தபாய ஆவணங்களைமக்களுக்கு முன்னிலைப்படுத்தவில்லை.

தன்னுடைய பிரஜாவுரிமை நீக்கப்பட்டுள்ளது என்றால் மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இலங்கைப் பிரஜைக்கு தங்களின் வாக்கை மக்கள் வழங்க வேண்டும், அமெரிக்கப் பிரஜைக்கு தங்களின் வாக்கை வழங்க வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் காப்பாளர், அதிபர் தி.தேவதயாளன் முன்னிலையில் திருமதி பு.சிவகுமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் வைசிறிஸ்கந்தவரோதயன், பழைய மாணவர் சங்கப் பொருளாளர் மு.புவீஸ்வரன் (ஜே.பி.), கௌரவ விருந்திளர்களாக வடமாகாண சுற்றுலாத்துறைத் தலைவர், பேராசிரியர் க.தேவராஜா, உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.யாதவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

• • • • • • • • • • • • • •

(கொடிகாமம்)

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் ம.தர்மசீலன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இராஜி மயில்வாகனசிங்கம், கரவெட்டி பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.சுமன், கௌரவ விருந்தினராக ஜே/341 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பிரேமதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)

• • • • • • • • • • • • • •

(கரணவாய்)

வதிரி திரு இருதய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.ராகவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக கரவெட்டி அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ஏ.பி.அந்தோனிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)

## பாதுகாப்புடன் தொடர்புடைய ஒருவரிடம் நாட்டை ஒப்படைக்க முடியாது-அரசாங்கம்


(கொழும்பு)

இராணுவ கலாசாரத்திற்கு பழக்கப்பட்ட ஒருவருக்கு ஜனநாயக கலாசாரத்தை பின்பற்றுவது கடினமாகும். எனவே நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒருவருக்கு நாம் உரிய கௌர வத்தையும் மரியாதையையும் வழங்க முடியுமே தவிர நாட்டை ஒப்படைக்க முடியாது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைப் புலி கள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் கொல்லப்பட்ட தன் பின்னர் பெருமளவில் இனவாத மோதல்கள் ஏற்பட்டன. இதன் போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாரிய சேவையாற் றினார். அந்தச் சேவையை ஒரு நாளும் எம்மால் மறக்க முடியாது. எனவே சஜித் அரசாங்கத்தில் அவர் பாதுகாப்பு அமைச்சராக செயற்படுவதில் எவ்வித சிக்கலும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அகவை எண்பதில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



தன்னிகரில்லா முதல்வர்
நீதியரசரே
தமிழினம் காத்திருக்கு
தலைநிமிர்த்து எழுக

நேர்கொண்ட பார்வை
யார்க்கும் அஞ்சிடாத நெஞ்சுடனே
சுடர் விடு ஞானச் செருக்கு,
சத்தியத்தை பேணுதற்காய்,
எம்மின உரிமைதனை நிலைநாட்டுதற்காய்
எதனையும் இழந்திடத் தயங்கிடாத தியாக சிந்தை,
அத்தனையும் கண்டோம்
உம்தன் ஞானியாம் தோற்றத்துள்ளே

எழுக தமிழில்
எழுச்சியாய் நீ தந்த உரை
சர்வதேசத்து,
பன்மொழி ஊடகங்களிலும்
பேசுபொருளாயிற்றே
எம்மினத் துயரமெல்லாம்
எல்லோரும் அறிந்திடவே
நேர்மையாய் உரைத்திட
உன்னைவிட்டால்
யாரிருக்கார்?

புண்பட்ட நெஞ்சங்கள் பலவுண்டு இங்கே!
கண்ணீர் பெருக்கெடுக்கும் துயர் நிறைஞ்சிருக்கிங்கே!
துயர் களைவார் யாருமில்லை.
மருந்திடுவார் யாருமில்லை.

விதைத்திட்ட உறுதிமொழிகள் மறந்து
தம்மடி நிரப்ப ஜாலவார்த்தை பேசும்
தலைவர்களை நம்பியா தமிழினம் வாழ்வது!
வாயில் காத்து நிற்போன்
வீட்டை வைத்து இழத்தல் போலே
இனவுரிமை அடைவுவைத்து
தம் பதவி காத்திருக்கும்
தலைவர் தானா தமிழர்க்கு வழிகாட்டி!


தத்தளிக்கும்
எம்மினத்தை காத்திட எழுக
தரணியிலே பல்லாண்டு
சிறப்போடு வாழ்க
அகவை எண்பது காணும்
இந்நாளில்
அகமகிழ்வாய்
வாழ்த்துகிறோம்

ஆ.சிவயோகன், வல்வெட்டித்துறை



திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக் கழகத்தால் கலாசாலை வீதியை அழகுபடுத்தும் முகமாக நேற்று வீதியோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அப்பிரதேச மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாக ஆர்வத்துடன் மரக்கன்றுகளை நாட்டினர். நூறு மரக்கன்றுகளை நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் வழங்கியதுடன் வட்டார உறுப்பினருடன் மரக்கன்று நடுகை நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த விளையாட்டுக் கழகத்தின் முன்மாதிரியான செயற்பாட்டை அப்பகுதி மக்களும் நல்லூர் பிரதேச சபை தவிசாளரும் பாராட்டினர்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# வேம்பும் வேப்பங்கள்ளின் மருத்துவ குணங்களும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


Botanical Name-Azadirachta indica

குடும்பம்-Meliaceae

இந்தியா, இலங்கையைச் சார்ந்த மரம். இதனுடைய இலைகள், குருத்திலைகள், பூக்கள், விதைகள், பழங்கள், பட்டை, வேப்பங்கூர், வேர், இத்துடன் வயதான வேம்பிலிருந்து சுரக்கப்படும் வேப்பங்கள் (Neem toddy) அனைத்துமே மருத்துவ குணங்கள் மிகுந்தவை.

100 வயதுடைய வேம்பின் பாகங்கள் சிறப்பான மருத்துவப்





புண்புகள் மிக்கவை. வேப்பமரத்திலிருந்து சுரக்கப்படும் பிசின் கூட மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

வேப்பம் பூவுடன் சிறிது இஞ்சி, கொத்தமல்லி இவற்றைச் சேர்த்து துவையலாக அரைத்து காலை உணவோடு உட்கொண்டு வந்தால் பித்தப்பை நோய்கள் தணியும்.

வேப்பம் பூக்களை சேகரித்து அவற்றை நிழலில் உலர்த்தி பின் மண் பானையில் போட்டு வைக்க வேண்டும். 30 நாட்கள் கழித்து பூக்களை எடுத்து லேசாக வறுத்துக் கொள்ள வேண்டும். கறிவேப்பிலை காய்ந்ததை பூ அளவிற்கு இடித்து இதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டையும் மீண்டும் இடித்து சிறிது உப்பிட்டு கொண்டு காலை உணவிற்கு முன் ஒரு தேக்கரண்டி அளவு உட்கொள்ள வேண்டும். இப்படிச் செய்து கொண்டு வந்தால் வாந்தி , குமட்டல், வயிற்றுப் பொருமல், குடற்புழு, ஆஸ்துமா சம்பந்தப்பட்ட நோய்கள் குணமடையும்.

தோலில் ஏற்படும் சொறி, சிரங்கு நீங்க வேப்பங் கொழுந்து இலைகளை மை போல அரைத்து தேய்த்து குளிப்பாட்ட வேண்டும்.

வேப்பங்கொழுந்து 2 கிராம் அளவு தினமும் காலையில் உட்கொண்டு வர நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம்.

வேப்பிலையோடு சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்தும் சொறி, சிரங்கிற்கு பற்றிடலாம்.

100 கிராம் அளவிற்கு முற்றிய காய்களின் சதையை எடுத்து தேங்காய் எண்ணெய் 300 கிராமில் போட்டுக் காய்ச்சி எடுத்து அவ் எண்ணெயை தோலில் ஏற்படும் தடிப்பு, அரிப்பிற்கு மேல் பூசி வந்தால் விரைவில் குணமடையும்.

பச்சை வேப்பம் பட்டையின் காய்ந்த பகுதியை மட்டும் நீக்கி விட்டு பஞ்சு போல் இடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு மட்கலத்தில் 300 மில்லி பசுப் பாலை ஊற்றி பானையின் வாயில் ஒரு சுத்தமான பருத்தித் துணியை தொய்வாகக் கட்டி அதன் மேல் இடித்த தூளை வைத்து மூடி சிறு தீயாக எரிக்க வேண்டும். பால் முக்கால் பங்கு சுண்டியதும் இறக்கி தூளை எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து வைத்துக் கொள்ளவும். காலை, இரவு உணவிற்குப் பின் 1/2 தேக்கரண்டி உட்கொண்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படுவதுடன் நீரிழிவு நோயால் ஏற்படும் உபத்திரவங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

300 கிராம் வேப்பெண்ணெயில் 100 கிராம் வேப்பம் பருப்பை போட்டுக் காய்ச்சி இறக்கி வடித்து ஆறாத புண்கள், குஷ்டரோகப் புண், நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் புண்களுக்கு மேல் தடவி வர குணமாகும்.




வேப்பம் பூக்களை சிறிது நிழலில் உலர்த்தி தேனில் ஊற வைத்து வேப்பம் பூ குல்கந்து தயாரித்து வைத்துக் கொள்ளவும். விரைவில் கெட்டுப் போகாது. இரவு தூங்குவதற்கு முன்பு ஒரு சிறு உருண்டை இந்த வேப்பம் பூ குல்கந்தை வாயில் போட்டு விழுங்கிவிட்டு வெந்நீர் குடித்து வர உடல் பலம் பெறும். எந்த நோயும் அணுகாது. பயன்படுத்தும் தேன் தூய தேனாக இருக்க வேண்டும்.

வேப்பிலையை அரைத்து ஒரு துணியில் முடிச்சாகக் கட்டிப் பிழிந்தால் சாறு வரும். தினம் 2 தேக்கரண்டி சாறு குடித்து வர முகப்பருக்கள், முகத்தில் ஏற்படும் வடுக்களும் இல்லாமல் அகன்று விடும்.

கொசுக்களை விரட்டுவதற்கு வேப்பம் இலைகளையும் விதைகளையும் சம அளவாக எடுத்து அரைத்து சிறு அடையாகத் தட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சட்டியில் நெருப்புத் தணலைப் போட்டு தீ தாங்கும் அளவிற்கு அடைகளைப் போட்டு விரல் அளவு துவாரம் உள்ள சட்டியால் மூடிவிடவேண்டும். இதை வீட்டுக்குள் வைத்து 30 நிமிடங்கள் வீட்டைப் பூட்டி வைக்க கொசுக்கள் அதாவது நுளம்புகள் அணுகாது.

100 வயதுடைய வேப்ப மரத்தின் (100 ஆண்டு வளையங்களுடைய வேம்பு) இலை, பூ, காய்,



பட்டை, வேர் இவைகளை சேகரித்து கழுவி சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி பின் அனைத்தையும் ஒன்றாகக் கலந்து இடித்து, பொடித்து, அரித்து சுத்தமான கண்ணாடிப் போத்தலில் போட்டு இறுக மூடி வைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் வேம்பு காய கற்பமாகும்.

இந்தப் பொடியில் வெறும் வயிற்றில் தினமும் காலை, மாலை 1-2 கிராம் அளவு சுத்தமான, தூய தேனில் குழைத்து சாப்பிட்டு, வெந்நீர் அருந்த வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் எமது உடற்கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்து எவ்விதமான நோய்களும் உடலை அணுகாது உடலை காத்துக் கொள்ள முடியும்.

வேப்பம் பூக்கள் பூக்கும் காலத்தில் வேப்ப மரத்தின் அடியில் பாயை விரித்துப் போட்டு தானாக உதிரும் பூக்களையும் கொப்புக்களையும் உலுக்கிப் பெறும் பூக்களையும் சேகரித்து நிழலில் உலர்



த்தி வைத்துக் கொண்டால் தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

100 வயதுடைய வேப்பமரத்தின் பட்டையை சேகரித்து சிறிது சிறிது துண்டாக நறுக்கி 1 பங்கு பட்டைக்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்திவர மலேரியாக்காய்ச்சல் நீங்கும். அத்துடன் மீண்டும், மீண்டும் வரும் மலேரியாக் காய்ச்சலையும் தடுக்கலாம். 100 வயது வேப்பம்பட்டை கிடைக்காவிட்டால் வயதான வேப்பம் பட்டைகளையும் பயன்படுத்தலாம்.

வேப்பம் பிசின் சற்று சிவந்த நிறமாக இருக்கும், வாயில் எடுத்துப் போட்டால் சிறிது கசப்பும், துவர்ப்புமாக இருக்கும். 40 கிராம் வேப்பம் பிசினை 360 மில்லி தண்ணீரில் ஊறவைத்து அதன் தெளிவை 30 மில்லி வீதம் காலை, மாலை அருந்த சீதபேதி நீங்கி உடல் பலப்படும். நீரிழிவு நோயாளர்களும் பயன்படுத்தலாம்.

வேப்பம் விதைகளை சேகரித்து செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். இது தோல் வியாதிகளை போக்கவல்லது. பாரிசவாயுவாக இருந்தாலும் சரி வாதவலியாக இருந்தாலும் சரி வேப்பெண்ணெயை தடவி ஒற்றடம் கொடுக்க வலி நீங்கும்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலிக்கு, வேப்பங்கொழுந்தை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து 1 கிராம் பூண்டு சேர்த்து விழுங்கவும். ஒரு நாளைக்கு ஒரு தடவை கொடுத்தாலே வலி தணியும். கர்ப்பப்பையையும் பலப்படுத்தும்.

வேப்பம் கள் (Neem toddy)

அரிதாக பெரும்பாலும் வயதான வேப்பமரத்தின் பட்டைகள் வெடித்து அதனின்று சுரக்கும் பொருளாக வடியும் பாலே வேப்பம் கள் எனப்படும். செயற்கையாக பட்டைகளை காயப்படுத்தி சேகரிக்க முடியாது. அரிதாகத்தான் கிடைக்கும். வடியும் போது இதனை சேகரித்து வைத்துக் கொள்ளவும். மட்கலத்தில் சேகரித்தல் சிறந்தது.

அறைவெப்பநிலையில் 6 மாதங்கள் கெடாமல் பாதுகாத்து வைத்துக் கொள்ள முடியும். வேப்பம் கள் போசனைகாரி (Nutrient), குளிர்ச்சி உண்டாக்கி(Refrigerant) பண்புகளைக் கொண்டது. உடலை பலப்படுத்தக் கூடியது. பெரும்பாலும் தோல் நோய்கள் வராமல் தடுக்கவும் கூடியது.

இந்தக் கள்ளில் அமினோ அமிலங்கள் (Amino acids) காணப்படுவது இன்னும் சிறப்பம்சமாகும். இதனாலேயே நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து உடல் பலம் பெறும். இதில் 30 மில்லி அளவு காலை, மாலை அருந்திவரலாம். உடலும், மூளையும் பலப்படும். உடலை திடகாத்திரமாக வைத்திருக்கும்.

காய்ச்சல் அல்லது சுரம் மீண் டும் மீண்டும் வருவதைத் தடுக்கும். இதிலிருக்கும் Amino aci ds ஆவன


Argenine, Tyrosine, Tryptophan, proline, Glutamic acid, Serine, Phenyla Laminine என்பனவாகும். வேப்பம் கள் மரங்களில் தர்னாக சுரக்கும் போது சேகரித்துபயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

18

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





கலாநிதி ரொஹான் எதிரிசிங்க

இரண்டாவதாக, மாகாண சபைக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள், செயற்பாடுகள் உட்பட அனைத்து விடயங்கள், செயற்பாடுகள் பற்றிய தேசியக் கொள்கைகள் அனைத்தும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று 13 ஆம் திருத்தம் முன்மொழிகின்றது. இதன் அடிப்படையில் இலங்கை மத்திய அரசாங்கமானது தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து மாகாண சபைகளின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் விதத்திலான சட்டங்களை காலங்காலமாக அறிமுகப்படுத்தி வருகின்றது.

மூன்றாவதாக, விடயங்கள், செயற்பாடுகள் பட்டியலிடப்பட்டிருக்கும் விதத்தை எடுத்து நோக்குவோமாயின், மாகாணசபையின் அதிகாரத்திலுள்ள பல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த கட்டுப்பாடுகள் பல விதிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, மத்திய அரசிற்கான அதிகாரம் மிகவும் பரந்த நோக்குடன், தாராள மனப்பான்மையுடன் அதிகளவு அதிகாரம் மத்திய அரசைச் சார்ந்து இருக்கும்படி அமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விடயம் என்னவெனில், 1978 ஆம்ஆண்டு அரசியலமைப்பானது மையத்தில் குவிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டதாகவும் மிகவும் சக்தி மிக்க ஜனாதிபதியின் ஆட்சியை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருக்கின்றது. இந்திய அரசின் வலியுறுத்தலே இந்த 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்குள் 13 ஆம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட முக்கிய காரணியாக அமைந்தது. இக் காரணத்தால், இந்தப் பிரேரணை மட்டும் முற்றிலும் மாறுபட்ட திசையில் செல்வதாகக் காணப்படினும் 13 ஆம் திருத்தம் தனியாக, அரசியலமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. இந்தியாவுடன் ஒப்பிடுகையில், ஜனாதிபதிக்கான அதிகாரம், சட்டங்களை இயற்றும் அதிகாரம், இயற்றப்பட்ட சட்டத்தினை மீள் பரிசோதனை செய்யும் முறையில்லாமை, மத்திய அரசில் மாகாண சபையின் பங்களிப்பில்லா முறை போன்ற காரணிகள் வேறுபடுகின்றன.

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரப் பரவலாக்கத்தினை பாதுகாக்கும் காரணிகள் இலங்கைக் குடியரசுச் சட்டத்தில் இல்லை. எனவே 13 ஆம் திருத்தமானது அதன் வடிவமைப்பில் அதிகாரப் பரவலாகத்தினை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் போதியளவு வலிமையைக் கொண்டதாக இல்லை என்பதே எனது கருத்து.

**கேள்வி-** 13 ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு கிடைக்குமா?

**பதில்-** நான் அவ்வாறு நினைக்கவில்லை. நான் முன்னமே கூறியது போல, 13 ஆம் திருத்தம் சில குறைகளை தன்னிடத்தில் உள்ளடக்கியுள்ளது. அது பாதுகாப்பான, திறமைமிக்க அதிகாரப்பரவலாக்கத்தினை முன்வைக்கவில்லை. இந்த 13 ஆவது திருத்தம், 20 வருடங்களுக்கு முன்னர், அரசியலமைப்பு முற்றிலும் வேறாக இருந்த வேளையில் அறிமுகப்படுத்தப் பட்டது. நாம் தற்போது இலங்கையில் நிலவி வரும் இனப் பிரச்சினைக்கு முக்கியமாக தமிழ் சமூகத்தினருக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் சட்ட ரீதியான தீர்வொன்றை யாப்பு மற்றும் அரசியல் சீர்திருத்தம் போன்றவற்றின் மூலமாக வழங்குவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து வருகின்றோம். எனவே, 13 ஆம் திருத்தத்தைத் தாண்டி, அரசியல் யாப்புக்கு இன்னும் செயற்றிறன் மிக்க சீர்திருத்தம் ஒன்றை நாட வேண்டியது அவசியம் என்பதே எனது கருத்தாகும்.

தீர்வானது கடந்த காலத்தைத் தாண்டி எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு முன்மொழியப் படவேண்டும். முந்திய மிதவாத தமிழ் அரசியல் கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்த ஒரு கருத்தை 20 வருடங்களின் பின்னர் நடைமுறைப்படுத்துவதென்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்க செயற்பாடன்று. நாங்கள் 13 ஆம் திருத்தத்தை விஞ்சிய ஒரு தீர்வை நோக்கி முன்னேற வேண்டும்.

இலங்கையில் இனப் பிரச்சினை நிலவி வருகின்றது என்பதையும் நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். எமக்குச் சுதந்திரம் கிடைத்தபோது, அல்லது பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தின்போது இது சாத்தியப்பட்டிருக்கக் கூடும். அந்த நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல், அரசியல் பிரச்சினை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, தீர்வானது கடந்த காலத்தைத் தாண்டி எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு முன்மொழியப்பட வேண்டும்.

இது ஒரு கூர்ப்பு செயற்பாடாகும். 20 வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு, முந்திய மிதவாத தமிழ் அரசியல் கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்த ஒரு கருத்தை 20 வருடங்களின் பின்னர் நடைமுறைப்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ளப்படத்தக்க செயற்பாடன்று. நாங்கள் 13 ஆம் திருத்தத்தை விஞ்சிய ஒரு தீர்வை நோக்கி முன்னேற வேண்டும்.

இதன் தொடர்ச்சி "13 ஆவது திருத்தமும் மாகாணசபைகளின் நிதிக் கட்டுப்பாடும்" என்ற தலையங்கத்தின் கீழ் அடுத்த கட்டுரையில் வரும்.

**முற்றும்**

# மகிந்த அணியின் நான்கு முனை தந்திரத்திட்டம் அம்பலம்!

## மக்களுக்கு மனோ எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் வாக்குகளைப் பிளவுபடுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன பெரமுன நான்கு முனைத் தந்திரத்தை கையாண்டு வருவதாகவும் அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.




தனது முகநூல் பக்கத்தில் இது குறித்து அவர் பதிவு ஒன்றை இட்டுள்ளார். அதில் தமிழ்-முஸ்லிம் மக்கள் தமக்கு வாக்களிக்க வேண்டும், அல்லது தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும், அல்லது, சஜித் அல்லாத ஏனைய சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும், அல்லது பகிஷ்கரிக்க வேண்டும் ஆகிய நான்கு வழிகளை கையாள வேண்டும் என்பதே அவர்களின் தந்திரத்திட்டமாக உள்ளது.

வாக்குகளை சிதறடித்து, தாம் வெற்றி பெறலாம் என்பதே இவர்களது இலக்காகும்.

இதற்காக பலரை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரசார களத்தில் இறக்கியுள்ளனர். அதுமட்டுமல்ல, பரீட்சயமான பலரை விலைக்கு வாங்கியும் போலிப் பெயர்களிலும் சமூக ஊடக தளத்திலும் இவர்கள் இறக்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)



வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா அண்மையில் இடம்பெற்றது.
(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)







செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் சு.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொண்டார்.
(படங்கள்-மகாலிங்கம்)

## ஒழுக்கம் எமக்கு இருந்தால்

- ஒழுக்கமே ஒருவனுக்கு வாழ்வை உயர்வதைத் தரும்.
- மக்கள் ஒழுக்கம் இல்லாதவரை மதிக்கமாட்டார்கள்.
- ஒழுக்கம் எமக்கு இருந்தால் மதிப்பு நம்மைத் தேடி வரும்.
- ஒழுக்கமே உயிரை விட மேலானது ஆகும்.
- ஒழுக்கம் இருந்தால் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.
- ஒழுக்கத்தின் மூலம் பணிவு என்ற உயர்ந்த பண்பைப் பெறலாம்.
- எமக்கு ஒழுக்கம் இருந்தால் உயர்ந்த குடிப் பிறப்பாளராவோம்.
- நல்ல ஒழுக்கம் இருந்தால் அறஞ்செயல்களை செய்வோம்.
- நல்ல ஒழுக்கம் இருந்தால் தீயசொற்களை பேசமாட்டோம்.
- நாமும் நல்ல ஒழுக்கங்களைப் பழகி மதிப்புடன் வாழ வேண்டும்.

சி.விநுஷா,
தரம் 06, யாழ்ப்பாணம் இந்து மகளிர் பாடசாலை.

## புத்தகத்தை ஏன் வாசிக்க வேண்டும்

- தெளிவாகவும் அழகாகவும் பேச.
- எழுத்துக்களை தவறு இல்லாமல் எழுத.
- மற்றவர்களிடம் பேசும் போது சரியான எடுத்துக் காட்டுக்களுடன் பேச.
- வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ள.
- படிப்பதால் மூச்சு சீராகும்.
- இதயத்தின் துடிப்பு சீராகும்.
- ஒரு நாளைக்கு 60 பக்கம் படிப்பதால் முகம் அழகாகும்.
- எந்த ஒரு விடயத்தையும் தெளிவாக எந்த ஒரு குழப்பமும் இன்றி எடுத்துச் செல்ல முடியும்.
- புத்தகம் படிப்பதன் விளைவாக நம்மைப் பற்றிய சிந்தனை, தொலைநோக்குச் சிந்தனையாகும். வாசிப்பு கிட்டும்.
- நல்லவை எவை? தீயவை எவை என்று பகுத்தறிவும் மனப்பக்குவமும் கிடைக்கும்.
- நம்முடைய தாய்மொழி மேல் தனி மதிப்பு உருவாகும்.
- அறிவியல் சிந்தனை கிடைக்கும்.
- மக்களாட்சி பற்றிய சரியான சிந்தனை வளரும்.

ம.மேனுஜா, தரம் 04,
யா/கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை.

## அறிந்துகொள்ள வேண்டிய தினங்கள்

சுகாதார தினம் :- ஒகஸ்ட் 16

சுற்றாடல் தினம் :- ஒகஸ்ட் 17

பாதுகாப்பு தினம் :- ஒகஸ்ட் 18

பொது நிர்வாக தினம் :- ஒகஸ்ட் 19

கல்வி தினம் :- ஒகஸ்ட் 20


மாகாண நிர்வாக தினம் :- ஒகஸ்ட் 21

த.திஷானா, தரம் 06,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.




# வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

## ஆணவம் அழிவை ஏற்படுத்தும்



ஒரு ஊரில் ஒரு குளம் இருந்தது. அக்குளத்தில் தங்கமீன் ஒன்றும் கெளுத்திமீன் ஒன்றும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் கெளுத்தி மீன் குளத்தின் அடிப்பக்கமாகவும் தங்கமீன் குளத்தின் மேற்பக்கமாகவும் நீந்திக் கொண்டிருந்த வேளையில் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். அப்போது தங்கமீன் கெளுத்தி மீனை நோக்கி நண்பனே நலமாக இருக்கிறாயா? என்று கேட்டது. அதற்கு தங்கமீன் நலம் என்று பதிலளித்தது. சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்த வேளையில் கெளுத்தி மீன் தங்க மீனை நோக்கி நண்பனே! குளத்தின் மேற்பக்கமாக சென்றால் கொக்குகள் நம்மை பிடித்து உண்டுவிடும். அதனால் குளத்தின் கீழ் பக்கமாக செல்வதே நமக்கு நல்லது.

இதைக் கேட்ட தங்கமீன் கெளுத்தி மீன் மீது கோபம் கொண்டது. கெளுத்தி மீன் நான் அழகாக உள்ள பொறாமையினால் தான் இவ்வாறு கூறுகிறது என எண்ணிய தங்கமீன் கெளுத்தி மீனை நோக்கி உன்னுடன் பழகுவது நான் மட்டும்தான். அப்படியிருந்தும் என் மேல் பொறாமை கொண்டு இவ்வாறு கூறுகிறாயே என்று கூறியதுடன் மட்டுமல்லாது இவ்வுலகில் எல்லோரும் என்னை விரும்புவார்கள். நான் தங்கம் போல் ஜொலி ஜொலிப்பேன். ஆனால் நீயோ அசிங்கமான நிறத்தில் இருப்பவன். உன்னை ஒருவரும் விரும்பமாட்டார்கள். என்னைக் காண்பதற்கு ஆசைப்படுவார். உன்னைப் பார்த்தால் அருவருப்பார். அதற்கு கெளுத்து மீன் நான் உங்கள் மீது பொறாமை கொண்டு அவ்வாறு கூறவில்லை. உங்களின் நன்மைக்கே அவ்வாறு கூறினேன்.

மேலும் எங்கள் இருவரையும் இறைவன் இவ்வாறு படைத்தமைக்கு பலமான காரணம் ஒன்று இருக்கவேண்டும். அதனால் தான் என்னை அசிங்கமாகவும் உன்னை அழகாகவும் படைத்தான். இது கடவுளின் படைப்பு இதில் என் குற்றம் எதுவும் இல்லை. நீங்கள் நலமாக வாழ்க என்று கூறி நான் பேசியதற்கு என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி குளத்தின் அடிப்பகுதிக்குச் சென்றது.

தங்க மீனோ அதனைப் பொருட்படுத்தாமல் குளத்தின் மேற்பகுதிக்கு துள்ளித் துள்ளிச் சென்றது.

சிறிது தூரத்தின் பின் தங்கமீன் கொக்கு ஒன்றின் வாய்க்குள் நுழைந்ததை அறிந்தது. கொக்கு தங்கமீனை பாறையில் வைத்து உண்ண முற்பட்டது. தங்கமீன் கொக்கிடம் என்னை விட்டுவிடு என அழுதது. உன்னை விடுவதற்காகவா பிடித்தேன். இப்படி ஒரு தங்கமீனை என் வாழ்நாளில் உண்டதே இல்லை. உன்னை நான் சாப்பிட்டே தீருவேன் என்று கூறியது. அப்போது தங்கமீன் கெளுத்திள மீனின் வார்த்தையைக் கேட்டு குளத்தின் கீழ் சென்றிருந்தால் இவ்வாறு கொக்கின் வாய்க்குள் அகப்பட்டிருக்க மாட்டேன். என் ஆணவத்தால் நானே அழிந்துவிட்டேன்.

ஜெ.வைஸ்ணவி, தரம் 07, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

## கல்வியின் சிறப்புகள்

- எண்ணும் எழுத்தும் கல்வியை குறித்து நிற்கின்றன.
- உலகத்தில் வாழும் மனித உயிர்களுக்கு எல்லாம் உண்மையான கண்ணாக விளங்குவது கல்வியே ஆகும்.
- கல்வியே ஒருவனுக்கு அழியாப் புகழைத்தேடி தருகிறது.
- ஒருவர் கல்வியை இளமையில் கற்றால் அவை மனதில் ஆழமாகப் பதிந்துவிடும்.
- நல்ல நூல்களை மீண்டும் மீண்டும் படித்தால் நமது அறிவும் வளர்ந்து கொண்டே செல்லும்.
- கல்லாதவர்கள் விலங்குகளுக்கே ஈடானவர்கள் ஆவர்.
- குலத்தால் புலமை சிறப்பதில்லை. மாறாக புலமையால் பிறந்த குலம் சிறக்கும்.
- கல்வியைக் கண்போலப் பேணி நாள் தோறும் கற்று அறிவாளிகளாக விளங்க வேண்டும்.

சி.கிபிசன், தரம் 02, யா/கோண்டாவில் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை.

தொகுப்பு:- கோண்டாவில் பொது நூலகம், யாழ்ப்பாணம்.

> உலக் வரலாற்றில் வலிமையே நியாயத்தை உருவாக்குகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய காலத்தில் நியாயமே வலிமையை உருவாக்குகிறது என்று மாற்றிக் காட்ட வேண்டும். – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒன்றுபட்ட ஐந்து தமிழ்க் கட்சிகளும் மீண்டும் கூடிக் கதைத்தனவா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எடுத்த பொறுப்பைச் சரியாகச் செய்யாமல் விட்டுவிட்டது என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஒரு சில பேரின் தூண்டுதலில், தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்துவது என்ற பேரில் 13 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து ஐந்து அரசியல் கட்சிகளின் ஒப்பத்தைப் பெற்றதுடன் தங்களின் பொறுப்பு முடிந்துவிட்டதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கருதுவது தெரிகிறது.

உண்மையில் இந்தப் பொறுப்பற்ற செயல் தமிழ் மக்களுக்குப் பெரும் ஈனத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தைத் தந்துள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப் படுத்துகின்ற முயற்சி நல்லது. ஆனால் ஒப்பமிட்டு ஒற்றுமைப்பட்ட ஐந்து அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைப்புச் செய்கின்ற பெரும் பணியை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே செய்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யாமல் விலகிக் கொண்டனர் எனும்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்த ஒற்றுமை பலத்த சந்தேகங்களையும் ஐயங்களையும் ஏற்படுத்தவே செய்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுப்பதற்காக 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்ற ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை ஐந்து தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொண்டன.

அத்துடன் 13 அம்சக்கோரிக்கையுடன் முக்கியமான ஜனாதிபதி வேட்பாளர்களை ஐந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றாகச் சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் சந்திப்பு எப்போது என்பதோ அல்லது ஐந்து தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து செயற்படுத்துகின்ற பொறுப்பை யார் செய்வதென்றோ முடிவு செய்யப்படவில்லை.

இதனால் ஐந்து தமிழ்க் கட்சித் தலைவர்களும் கூட்டாக ஒப்பமிட்டதைத் தவிர வேறு எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுவிட்டன. 13 அம்சக்கோரிக்கைகளுடன் ஐந்து கட்சித் தலைவர்களும் ஒன்றாகத் தென்பகுதிக்கு வருகின்றனர் என்ற செய்தி பரவியதும்; சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றாகக் கூடாமல், உடன்பாடிக்கை செய்யாமல், ஒப்பமில்லாமல் ஒன்றுபட்டு ஒற்றுமையாக, 13 அம்சக் கோரிக்கையை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என உடனடியாகவே கூறிவிட்டனர்.

இந்த அறிவிப்பு வெளியாகி நாட்கள் கடந்த போதிலும் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி ஐந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இதுவரை ஒன்றுகூடி ஆராயவில்லை என்றால்,

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதைப் பார்த்திருப்பது நியாயமானதா? என்பதை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிந்தித்து தங்கள் மாணவர் ஒன்றியத்திடம் கேள்வி கேட்க வேண்டும்.

ஆம், நாங்கள் ஒன்றுபடுவதாகக் காட்டாப்புக் காட்டி அவர்களை ஒன்றுபடுத்தி விட்டோம். இதுதான் நாம் செய்த நன்மை.

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் புவனேஸ்வரனை

### பயங்கரவாத தடுப்புப்பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு

(பனிக்கன்குளம்)

முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆண்டி ஐயா புவனேஸ்வரனை பயங்கர வாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை ஒன்று நேற்று அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் அமைந்திருக்கின்ற அவருடைய வீட்டிற்கு சென்ற பயங்கரவாத தடுப்பு பிரிவினர் குறித்த கடிதத்தை கையளித்து சென்றுள்ளனர்.

குறித்த கடிதத்தில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணை ஒன்றில் வாக்குமூலம் பெறவேண்டி இருப்பதனால் புதுக்குடியிருப்பு சுதந்திர புரம் பகுதியில் வசிக்கும் ஆண்டி ஐயா புவனேஸ்வரன் அவர்களை 24.10. 2019 காலை 10 மணிக்கு இரண்டாம் மாடி, புதிய செயலக கட்டிடம், கொழும்பு-1 எனும் முகவரியில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு 01 இன் பொறுப்பதிகாரி அவர்களை சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3,281)

## மதுபோதையில் அம்புலன்ஸ் செலுத்திய சாரதிக்கு தண்டம்

(வவுனியா)

வவுனியாவில் மது போதையில் அம்புலன்ஸ் வாகனம் செலுத்திய நபர் ஒருவருக்கு நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் 25 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

வவுனியா வீதிப் போக்குவரத்து பொலிசாரினால் வாகனச்சாரதியை அழைத்து அவரிடம் ஆவணங்களை பரிசீலனை மேற்கொண்ட போது மதுபோதையில் இருந்தது தெரியவந்தது. இதன் காரணமாக போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது குற்றச்சாட்டினை மன்றில் ஏற்றுக் கொண்ட நபருக்கு ஒரு வருடம் சாரதி அனுமதிப்பத்திரம் ரத்து செய்ததுடன், ஆறு மாத கால சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபாய் தண்டமும் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## பிரசாரத்தின் போது உடல் நலக் குறைவு

### மகேஷ் சேனநாயக்க வைத்தியசாலையில்

(கொழும்பு)

தேசிய மக்கள் இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் மகேஷ் சேனநாயக்க, திடீர் உடல் நலக் குறைவு காரணமாக பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடை நகரில் நேற்று (செவ்வாய்க்கிழமை) தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில், அவர் திடீர் சுகயீனம் அடைந்துள்ளார்.

இதன்பின்னர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## வவுனியாவில் குளவி தாக்கியதில் பாடசாலை மாணவிகள் காயம்

(வவுனியா)

வவுனியா கிடாச்சூரி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் இருவர் குளவி தாக்கியதில் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

குறித்த மாணவிகள் நேற்று மதியம் பாடசாலை முடிவுற்று வீடு சென்று கொண்டிருந்த போது வீதியின் அருகில் இருந்த பற்றைக்குள் இருந்த குளவிகள் அவர்களை தாக்கியுள்ளது.

இதனால் காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டனர்.

குறித்த சம்பவத்தில் மறவன்குளம் பகுதியை சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடைய இரண்டு மாணவிகளே காயமடைந்துள்ளனர். (ம-3,299)

## வடமாகாண பொருளாதார வளர்ச்சி தொடர்பில்

### இலண்டனில் புலம்பெயர் தமிழர்களுடன் ஆளுநர் சுரேன் ராகவன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

லண்டனுக்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் லண்டனில் வாழும் புலம் பெயர் தமிழர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த ஞாயிறு (ஒக்.20) லண்டனில் இடம் பெற்றது.

இந்த சந்திப்பின்போது வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம், விவசாயம், இளைஞர் விவகாரம் மற்றும் மீன்பிடித்துறை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் இத்துறைகளின் அபிவிருத்திக்கு புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறான முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்ளலாம், அவற்றிற்கு புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு எவ்வகையில் அமையவேண்டும் என்பது தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டது. மேலும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி தொடர்பில் இதன்போது விளக்கமளித்த ஆளுநர், இந்த கூட்டுறவு வங்கியின் ஊடாக வட மாகாண பாமர மக்களின் அபிவிருத்திக்கு எவ்வாறு புலம்பெயர் மக்கள் உதவ முடியும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

இப்போது செய்வதைவிட, இன்னும் சிறப்பாகப் பணியாற்ற திறமையும் வாய்ப்பும் இருந்தும் அப்படிச் செய்யாமல் இருப்பவனும் சோம்பேறியே.

-சோக்ரடீஸ்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை யாழ். பிரதேசத்தில் மாவடி, காளி கோவிலடி மூளாய், K.M.K. கடலுணவு பிறைவேட் லிமிட்டட், பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை கொலணி, காரைநகர்ப் பிரதேசம், காரைநகர் கடற்படை முகாம், காரைநகர் விடுதி, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, ஊரி, தோப்புக்காடு, வலந்தலை, வியாவில், கருங்காலி, களபூமி, Ceynor Foundation Ltd, மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளப் பட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம், கழுவாத்துறை, அராலி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் கைவேலியிலிருந்து புதுக்குடியிருப்பு, Hydramani ஆடைத் தொழிற்சாலை, புதுக்குடியிருப்பு 682 ஆம் படைப்பிரிவு, இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செட்டிகுளம் நகரப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உளுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தலை மன்னார் கிராமம், படப்பாடி, தலைமன்னார் Palmyrah House ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### ஆனந்த தீபம் ஏற்றுவோம்

✦ தீபமங்கள ஜோதியாக விளங்கும் சிவபெருமானை திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வணங்குவது சிறப்பு.

✦ தீப்பந்தத்தை கீழ்நோக்கிப் பிடித்தாலும், அதன் ஜுவாலை மேல்நோக்கி எழுவது போல் உயர்ந்த குணத்தைக் கீழ்ப்படுத்த, யாராலும் முடியாது.

✦ வியாதி தீர பத்தியம் கடைப்பிடிக்க வேண்டும். அதுபோல் தெய்வீக வழியில் நடப்பவன் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

✦ ஒளி மார்க்கத்தில் உள்ளவர்களுக்கு சொர்க்கமும், இருள் மார்க்கத்தில் உள்ளவர்களுக்கு நரகமும் கிடைக்கிறது. ஒளிக்காக திருக்கார்த்திகையில் விளக்கேற்றப்படுகிறது.

✦ நான் என்ற எண்ணம் விலகினால் துன்பம் முழுவதும் நீங்கப் பெற்று அருட்பெருஞ் ஜோதி தரிசனம் உண்டாகும். ஆனந்தம் உதிக்கும், என்றும் அழியா இன்பம் தோன்றும்.

✦ இறைவனுடைய கருணையைப் பெற நினைப்பவர்கள் பிற உயிர்களிடம் கருணை காட்ட வேண்டும்.

# அரையிறுதிக்குள் வடமாகாண அணி



தேசிய மட்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வடமாகாண அணியை எதிர்த்து மேல் மாகாண அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 07:01 என்ற கோல் கணக்கில் வடமாகாண அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

வடமாகாண அணி சார்பாக ஞானரூபன் 03 , சாந்தன் 02 மற்றும் ஜெயராஜ் , கலிஸ்ரர் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

மேல் மாகாணம் கொழும்பு , கம்பஹா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# அடுத்த சுற்றுக்குள் எல்லாளன் அணி



யாழ்.லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஒலிம்பிக் அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 08:00 என்ற கோல் கணக்கில் எல்லாளன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

# நடுவர்களுக்கான பயிற்சிப்பட்டறை

பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தின் நடுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் நவம்பர் மாதம் 02,03 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள இலங்கை உதைபந்தாட்ட நடுவர் சம்மேளன வளவாளர் குழுவினரால் நடுவர்களுக்கான பயிற்சி முகாமை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கு பற்றவிரும்பும் உதைபந்தாட்ட நடுவர்களுக்கான பதிவுகளை பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்கத்திடம் (077 9352496,/0771307256) மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



உரும்பிராய் திருக்குமரன் வி.க நடாத்தி வருகின்ற சோபநாத் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரீஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது .ஆட்ட நேர முடிவில் 05:03 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்றது. றோயல் அணி சார்பாக டினுஜன் 02 ரூ கோபன், பிரசன்னா, துஷாந்தன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர்

# ஒற்றுமைக்கிண்ண உதைபந்து குழந்தை யேசு அணி சம்பியன்



நாச்சிக்குடா ஜின்னா விளையாட்டுக்கழகம் நடத்திய ஒற்றுமை கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் குழந்தை யேசு அணியை எதிர்த்து ஸ்ரார் லைன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் குழந்தை யேசு அணி வெற்றி பெற்று சம்பியனானது.

குழந்தை யேசு அணி சார்பாக வில்சன் 02 , கிறிஸ்ரியன், றஞ்சா ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் சிறந்த வீரனாக வில்சனும் சிறந்த கோல் காப்பாளாராக கர்னும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# FA கிண்ணத் தொடர் ஞானமுருகன் அணி வசம்



யாழ்.லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான FA கிண்ணத் தொடரில் அண்மையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய் நாம் தயார்**

# ஜனாதிபதித் தேர்தல் 1,237 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 1,237 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு மாத்திரம் 68 முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதே வேளை தேசிய தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 35 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 97 முறைப்பாடுகள் தேர்தல் சட்டதிட்டங்களை மீறியதாகவும், 5 முறைப்பாடுகள் தேர்தல் தொடர்பான ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பிலும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வன்முறைகள் தொடர்பிலும் முறைப்பாடொன்று அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 8 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரையான 14 நாட்களுக்குள் 1,237 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ம-3)

## விவசாயிகளின்...

அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய விவசாயக் கொள்கை நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டில் விவசாயத் துறையில் மாற்றத்தை கொண்டுவரவும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுமே தனது நோக்கம் என கூறினார்.

மேலும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அவர்களின் உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான மற்றும் உத்தரவாத விலைகளை நிர்ணயிப்பதாகவும் உறுதியளித்தார்.

அத்தோடு நாட்டில் வெவ்வேறு பருவங்களில் விலைகளின் ஏற்ற இறக்கங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அநுரகுமார திசாநாயக்க, இதுபோன்ற விலை ஏற்ற இறக்கங்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்றும் சாடினார். (ம-3)

## ஹரி ஆனந்த...

கனேடிய பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றாரியோ மாகாணத்தில், ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதியில் இரண்டாவது முறையாகப் போட்டியிட்ட ஹரி ஆனந்த சங்கரி 21 ஆயிரத்து 241 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்த சங்கரிக்கு இந்தமுறை 62.3 வீத வாக்குகள் கிடைத்துள்ளதாக இறுதி முடிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ம-3)

# பெண்களின் கடன்களை ரத்துச் செய்வேன்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதியாக தான் பதவியேற்றதன் பின்னர் நுண்கடன்களைப் பெற்று அவதியுறுகின்ற பெண்களின் கடன்களை ரத்துச் செய்யவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பு - சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிக வட்டி அறவிடும் நிறுவனங்களில் கடனைப் பெற்று அனர்த்தத்தில் சிக்குண்டுள்ள



இலட்சக்கணக்கான பெண்கள் நாட்டில் உள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் அவ்வாறு அதிக வட்டியை அறவிடும் நிறுவனங்களில் கடன்பெற்றுள்ள பெண்களின் கடனை ரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்தார். (ம-3)

## மகா சங்கத்...

சங்கத்தினருடனான விசேட மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் கூறினார்.

நாம் இப்படியான ஒரு முக்கிய தருணத்தில், ஒதுங்கியிருப்பதை விட, நாட்டிற்காக போராடி சிறைப்படுவதற்கு எம்மால் முடியாதா? எனவும் தேரர் கேள்வி எழுப்பினார்.

சமய ஸ்தலங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வேட்பாளர்களை ஆதரித்து மத தலைவர்கள் கருத்துத் தெரிவிப்பதை முற்றாக தவிர்த்து கொள்ளுமாறும் அவ்வாறு கருத்துத் தெரிவிப்பது தேர்தல் சட்டப்படி குற்றம் எனவும் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாராளுமன்ற...

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாயவை ஆதரிக்க முடியாது என்பதே பெரும்பாலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் நிலைப்பாடாக இருந்தபோதும், அதனை பகிரங்கமாக அறிவிக்கலாமா? அதனால் கோத்தபாய தரப்பிற்கு அனுகூலம் கிட்டுமா என்ற விவாதங்கள் கூட்டமைப்பிற்குள் தீவிரமாக கடந்த சில தினங்களாக ஈடுபட்டுள்ளது.

எனினும் இன்று ஜனாதிபதி தேர்தல் குறித்த இறுதி நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்காது என்றே தெரிகிறது. (ம-3)

## இடியுடன் கூடிய...

யிட்டுள்ள. வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வட மாகாணத்தில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## கஞ்சாவுடன் ஒரு...

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சாவகச்சேரி மதுவரி நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மதுவரி நிலைய உதவி ஆணையாளர் சோதிநாதனின் வழிநடத்தலுக்கு அமைய கச்சாய் வீதி, சாவகச்சேரிப் பகுதியிலுள்ள உதயசூரியன் பகுதியில் மதுவரி திணைக்களத்தினர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது 18 கிராம் கேரளா கஞ்சாவுடன் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3.60)

## காரைநகரில்...

கள் நிறைவடைந்து நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டதுடன், 9 எதிரிகளில் 7 பேர் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய இருவருக்கு கொலைக் குற்றத்திற்காக மரணதண்டனை விதித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தக் கொலை வழக்கில் மரணதண்டனை பெற்றவர்களில், கொலை செய்யப்பட்டவரின் தம்பியும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஈஸ்டர் தாக்...

இடம்பெறாமல் இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் அதில் உள்ளடங்கியுள்ளன. 200 பக்கங்களை உள்ளடக்கிய இந்த அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்து வருவதாக தெரிவுக்குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் வெளியாகும் சில தகவல்கள் தவறானது என குறிப்பிட்டுள்ள அவர், எவரையும் குற்றவாளியாக்குவதற்காக இந்தக் குழு அமைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சமூக வலுவூட்...

தேர்தல்கள் ஆணைக்குழு மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் விதிமுறைகளை மீறி இந்த நியமனம், காசோலை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் அறிவிக்கப் பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் அவசியமென கருதப்படும் இடமாற்றங்களும் நியமனங்களுமே வழங்கப்பட வேண்டும்.

இந்த விதிமுறையை மீறி வழங்கப்பட்ட நியமன கடிதங்களை மீளப்பெறவும் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கையெடுத்துள்ளது. (ம-3)

## மோ.சைக்கிள்...

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அருகில் உள்ள கடைக்கு குறித்த பெண் சென்ற போது யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் குறித்த பெண் மீது மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த பெண் பூநகரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## தீவிரவாதத்தை இல்லாதொழி...

பெலியத்தவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடத்தில் ஏறியவுடன், இந்த நாட்டின் பாதுகாப்பிற்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதனால்தான் இந்த நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலைதூக்கியுள்ளது. 30 வருடங்களாக நாட்டில் நிலவிவந்த தீவிரவாதத்தை முற்றாக இல்லாதொழித்த எம்மால் மட்டுமே மீண்டும் தீவிரவாதத்தை இல்லாது செய்ய முடியும்.

இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவேன்.

புலனாய்வுத் துறையைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக மீண்டும் மக்களுக்கு பாதுகாப்பானதும் நிம்மதியாக வாழக்கூடியதுமான நாட்டை நாம் வழங்குவோம் என மேலும் தெரிவித்தார். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 769
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,910,235/-
வெற்றி இலக்கங்கள் 01 07 16 46 T
விசேட வெற்றி இல. 1338

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 511
திகதி 22.10.2019 செவ்வாய்
வர்ணம் இளம் சிகப்பு
N 12 23 29 30
10069
அடுத்த சுப்பர் ஜக்பொட் 144, 729, 208/=
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1614
சீட்டிழுப்பு திகதி 22/10/2019
வெற்றி இலக்கங்கள் 07 17 34 60 U
அடுத்த வியாழக் கிழமைக்கான ஜக்பொட் ரூ.39,609,276
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22/10/2019
வெற்றி வாரம் 2655
வர்ணம் சிகப்பு
கன்னி
வெற்றி இலக்கங்கள் 01 37 43 62
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,858,486
2019/10/23 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

செவன
திகதி 22/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 229
O 17 40 43 61

மஹஜன சம்பத
திகதி 2019/10/22
சீட்டிழுப்பு இலக்கம் 4033
C 1 4 1 9 6 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2278
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 14 22 31 68
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/10/22
சீட்டிழுப்பு இலக்கம் 614
லக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 07 18 39 63

# சஜித்துக்கு அவரது கருத்துக்களே எதிர்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, பிரசாரக் கூட்டங்களின்போதே தொடர்ச்சியாக பேசிக் கொண்டு வந்தால், கோத்தாவின் வெற்றி உறுதியாகிவிடும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, சஜித் பிரேமதாஸவிற்கு எதிரி அவரது கருத்துக்களே என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெலியத்த பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார். (ம-3)


### வேலையாள் தேவை

போட்டோக் கொப்பி / புத்தகக் கடை வேலை தெரிந்த அல்லது பழகவிரும்பும் பெண் பிள்ளை தேவை.

தொடர்புகளுக்கு:
076 869 6181
077 209 6310 (740)

### இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1 Kg மொத்தமாகவும் ரூபாய் 100), சில்லறையாகவும் (ரூபாய் 110) பெற்றுக் கொள்ளலாம்.

சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
தொடர்புகளுக்கு:- 021 222 2567 (C-7993)

### அன்பொளி கல்வியகம்

எமது கல்வியகத்தில் கல்வி கற்று 2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான

பரிசளிப்பு விழா

காலம்
26.10.2019 சனிக்கிழமை பி.ப. 2.00 மணி
இடம்
சரஸ்வதி மண்டபம், ராஜா கிறீம் ஹவுஸ், நாச்சிமார் கோவிலடி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இயக்குநர், ஆசிரியர்கள்
(C-7995)

### மருத்துவக் கல்வி கருத்தரங்கு யாழில்...



10 NOVEMBER 2pm to 6pm
@ Jetwing Hotel Jaffna
STUDY IN CHINA
✓ Study with over 100 Sri Lankan Students
✓ Limited seats are available
English Medium MBBS 2020 March intake
Recognized by SLMC
Book your Seats 076 764 6888
www.byfedulk.com (711)

### உடனடி வேலைவாய்ப்பு

நிரந்தர வேலைவாய்ப்பு ஒன்றை தேடும் நபர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு பல்வேறுபட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

- ஒவ்வொரு பதவிகளுக்கும் பயிற்சியளிக்கப்படும்.
- முன் அனுபவம் அவசியமற்றது.
- பயிற்சியின்போது 15000 - 18000/=
- பயிற்சியின்பின் 35000 - 42500/= வரை பெற்றுக் கொள்ள முடியும்.
- வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிடம் ஒழுங்குபடுத்தித் தரப்படும். (738)

தொடர்புகளுக்கு:-
077 5918 589, 076 472 4440

### ARK Mobile Shop

தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக்கழிவு!!

1 வருட உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில் ரூ. 1250 இற்கு எம்மிடம் புதிய கைத்தொலைபேசிகளை பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் சகலவிதமான தொலைபேசிகளையும் திருத்தி பெற்றுக் கொள்ளலாம். மற்றும் லொக் உடைத்தும் கொடுக்கப்படும்.

ARK Mobile Shop
அரசடி வீதி - பிறவுண் வீதி சந்தி
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
A.Ramana - 077 923 3380, 021 221 6465 (C-7996)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### வேலைக்கு ஆள் தேவை

சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.30 - மாலை 4.30 மணி வரை கல்வி நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு ஆள் தேவை.

தொடர்புகளுக்கு:- (8000)
077 104 1923

### முதலாவது அணி பயணமானது! அடுத்த அணியில் 65 பேருக்கு வாய்ப்பு!!



வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் ஊடாக...

றோமானியா வேலைவாய்ப்பு

மேசன், கட்டட தச்சுவேலையாள்
மெக்கானிக், களஞ்சியசாலை பணியாளர்
ஓட்டோ எலக்றீசியன், றைல் ஃபிற்றர், சமையலாளர்
உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்

எமரல்ட் ஐல்
License No. 2268
077 00 38 215
077 55 46 956
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Teen Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email jaffna@emeraldisle.lk

### 3-6 மாத அலுவலக பயிற்சிகள்

பயிற்சியின் பின்னர் வேலை வாய்ப்புக்கள்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி (C-7539)

- எமது அனைத்து கிளைகளிலும் 3-6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் பின்னர் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS (C-7539)
0768226240 V2 TRAVELS
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி (C-7992)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை


### அமெரிக்க அதிஸ்ட விசா - இன்னும் 10 நாட்களே உள்ளது

2021ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000
0768226241 இலவச விசாக்கள்
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
உடனே விரையுங்கள்
(C-7975)
கமலேந்திரன் - குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 | புதுக்குடியிருப்பு 0764550673 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 | மருதங்கேணி 0764550671 |


# கண்ணீர் அஞ்சலி



எமது விஞ்ஞான ஆசிரியர், ஓய்வுநிலை அதிபர்
(கறுக்காய்த்தீவு, பூநகரி)

## சு.கணபதிப்பிள்ளை

அவர்கள்

20.10.2019 அன்று இறைபதமடைந்ததையிட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்;-
நடராஜா திருஞானபவன், நடராஜா சதானந்த பவன்
(சரவணப்பொய்கை)
(C-7999)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.